# சேர சோழ பாண்டிய மூவேந்தர் மரபினரின் அடையாளங்கள்

**பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்** B.E., M.Sc.,(Engg),Ph.D.,(UConn-USA)

மாநிலத் தலைவர் : தேவேந்திர குல வேளாளர் சங்கம்
நிறுவனர் & தலைவர் : அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகம்
நிறுவனர் & தலைவர் : தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம்
ஆசிரியர் : மள்ளர் மலர், தமிழ்த் திங்களிதழ்

**வெளியீடு**

**தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம்**
**10/2, நால்வர் நகர்**
**பாரதியார் பல்கலைக் கழகம் (அஞ்சல்)**
**கோயம்புத்தூர் - 641 046,**
**இரண்டாம் பதிப்பு, செப்டெம்பர் 2004 - விலை ரூ.10**

CR
90-029
DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
MADRAS

# தமிழின விடுதலை வேள்வி

1. அடிமைப்பட்ட ஒரு நாட்டின் அல்லது இனத்தில் விடுதலைக்கு அதன் வரலாறுகளும் பண்பாடுகளுமே விடுதலைப் போருக்கான போர்க்கலன்கள் ஆகும்.

2. எந்த ஒரு இனம் தனது வரலாறுகளையும் பண்பாடுகளையும் இலக்கியங்களையும் உரையாடிக் கொண்டிருக்கிறதோ அதுதான் உயிருள்ள இனம் ஆகும். அப்படிச் செய்யவில்லை என்றால் அது அடையாளமற்றுச் செத்துப் போன இனமாகிவிடும்.

3. சாக்கிரட்டீசின் தத்துவங்கள்: உன்னை நீ அறிந்து கொள். எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள். உன்னை அறிந்து கொள்வது என்பது உமது மற்றும் உமது முன்னோர்களின் வரலாறுகளையும் பண்பாடுகளையும் அறிந்து கொள்வதாகும்.

4. உனக்கும் இந்த மண்ணுக்கும் உள்ள சொந்தம் என்ன? உனக்கும் இந்தத் தமிழ்மொழிக்கும் உள்ள சொந்தம் என்ன? உனக்கும் இந்தத் தமிழகத்தின் வரலாற்றுக்கும் உள்ள சொந்தம் என்ன? உனக்கும் இந்தத் தமிழ்ப் பண்பாட்டிற்றிக்கும் உள்ள சொந்தம் என்ன? தெரிந்து கொள்.

5. நீயே மூத்த தமிழன். முதுகுடுமி, மருதநிலத் தலைமகன் வேந்தன். உனது தலைமையின் நிழலிலே தான் இந்தத் தமிழகம் வாழ்ந்தது, சென்ற ஐந்நூறு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை. சென்ற ஐந்நூறு-அறுநூறு ஆண்டுகளாகத் தமிழகம் தமிழரல்லாத வெள்ளையர், மராட்டியர், முகமதியர், கன்னடர், தெலுங்கர் ஆகியோரின் ஆட்சியின் கீழ் உள்ளது. வெள்ளையர் சென்று விட்டனர். மற்றவர் ஆதிக்கம் நிலைத்துள்ளது. உனது வலிமையையும் வளமையையும் அறிந்து தமிழரல்லாதவர்களிடமிருந்து தமிழகத்தை மீட்டு மீண்டும் தமிழராட்சி ஏற்படுத்துவது தமிழரின் தலைமகனான உமது கடமை ஆகும்.

# சேர, சோழ, பாண்டிய மூவேந்தர் மரபினரின் அடையாளங்கள்

தமிழகத்தில் புதிய கற்காலத்தில் மனிதன் உழுது பயிரிடும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தான். மக்களின் வளம் பெருக்கும் இத்தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்த மக்கள் மள்ளர் குலத்தினர் எனப்பட்டனர். மள்ளர் என்றால் வளம், வலிமை என்று பொருள்படும். இம்மக்களே பின்னர் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தையும் கண்டுபிடித்து ஆறு, குளம், ஏரிகளின் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தி வளம் பெற்றனர். குடும்பம் என்ற நிறுவனத்தை முதன்முதலில் ஏற்படுத்தியதால் குடும்பன் எனப்பட்டனர்.

மள்ளர், குடும்பர் குல மக்கள் வாழும் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த நிலப்பகுதி மருதநிலம் எனப்பட்டது. இம்மக்களின் தலைவர் வேந்தன் எனப்பட்டார். இவ்வேந்தனைத் தொல்காப்பியம் எனும் பழங்கால இலக்கண நூல் மருத நில இறைவன் எனக் கூறுகிறது. இவ்வேந்தன் இந்திரன், தேவேந்திரன், புரந்தரன், வலாரி, தேவர் வேந்தன் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டார். இவ்வேந்தன் மரபினரே பின்னாளில் சேர வேந்தன், சோழ வேந்தன், பாண்டிய வேந்தன் எனப் பல நிலப்பகுதிகளையும் ஆண்டனர். தமது மொழியாகிய தமிழைச் சங்கம் வைத்து வளர்த்தெடுத்தனர். குடுமி (குடும்பன்), குடுமிச்சிகள், மள்ளர், மள்ளிகள், அரசர், அரசிகளாகத் தமிழகத்தை ஆண்டுவந்தனர். இவர்கள் தேவேந்திர வம்சத்தினர் எனப்பட்டனர்.

தொல்காப்பியம், புறப்பொருள், வெண்பாமாலை முதலிய பழம்பெரும் இலக்கண நூல்கள் குடுமியை (குடும்பன்) வெற்றி கொள்ளும் துறைகள் பற்றிக் கூறுகின்றன. வேள்விக்குடிச் செப்பேடும் புறநானூறும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய வேந்தனைப் புகழ்பட்ப் போற்றுகிறது. கல்வெட்டுகளில் குடும்பன் என்ற சொல் பல திரிபுகளில் குடுமி, குடுமிச்சி, குடும்பிய குலம், குடுமர், குடுபர், குடும்பிகன், குடும்பி, குடும்பிச்சி என வருகிறது.

பல அரசர்களின் மெய்க்கீர்த்திகள் நல்லாட்சிக்கு எடுத்துக்காட்டாக தேவேந்திரன் போல் ஆட்சி செய்தான் எனக்

கூறுகின்றன. தமிழ் மூவேந்தர்களின் கீழ் ஆட்சி செய்த பல சிற்றரசுகளும், குறுநில மன்னர்களும், படைத்தளபதிகளும், முதலிகளும், அரையர்களும் மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குல வேளாளர்களாகக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றனர். அதியமான்கள், இருங்கோவேளிர்கள், கொங்குச் சோழர்கள், கொங்குப் பாண்டியர் யாவரும் மூவேந்தர்களின் உறவினர்களாகவும் மணஉறவு கொண்டவர்களாகவும், சோழன் எனவும் பாண்டியன் குடும்பர் எனவும் குறிப்பிடப்படுகிறார்கள். இந்த தேவேந்திர வம்சத்தினர் இரண்டு பெரும் வீழ்ச்சிகளைச் சந்தித்தனர். முதல் வீழ்ச்சி கி.பி.3 முதல் 6-ஆம் நூற்றாண்டுகளில் களப்பிரரால் ஏற்பட்டது. ஆறாம் நூற்றாண்டில் பாண்டிய வேந்தர் கடுங்கோன் மள்ளர் களப்பிரரை விரட்டி மீண்டும் தமிழ் வேந்தர் ஆட்சியை நிறுவினார்.

தேவேந்திர வம்சத்தினரான தமிழ் வேந்தர்களின் இரண்டாம் வீழ்ச்சி கி.பி.14-ஆம் நூற்றாண்டு தொடங்கி 16-ஆம் நூற்றாண்டில் முழுமை பெற்றது. இவ்வீழ்ச்சி தெலுங்கு, கன்னட வடுகர்களால் ஏற்பட்டது. இந்த இரண்டாம் வீழ்ச்சியிலிருந்து தமிழர் இன்னும் மீட்சி பெறவில்லை. இக்காலத்தில் மள்ளர் என்ற பெயர் பள்ளர் என்று மாற்றம் பெற்றது.

வேந்தர் என்ற சொல்லின் இலக்கணம் மருத நில மக்களான மள்ளர், குடும்பர் குலத்தினரின் தலைவர் என்பதாகும். இந்த இலக்கணம் தமிழ் மூவேந்தர் மரபினர் குறிஞ்சி நில மக்களோ, முல்லை நில மக்களோ, நெய்தல் நில மக்களோ, பாலை நில மக்களோ இல்லை என்பதை உறுதி செய்யும்.

தேவேந்திர வம்சத்தார் குடும்பன், பலகன், மூப்பன், வாய்காரர், பணிக்கர், அணியன், பண்ணாடி, காலாடி, கடையர், மள்ளர் என்ற பிரிவுகளையும் பன்னீராயிரம் கோத்திரங்களையும் உடையவர்கள் ஆவர். தமது பெருமைகளையும் சிறப்புகளையும் உணர்ந்து அந்தப் பெருமைகளை மீட்டு எடுத்துக் காப்பாற்றச் செயல்பட வேண்டும். கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் இலக்கியங்களிலிருந்து தமிழ் மூவேந்தர் மரபினரை அடையாளம் காட்டும் ஒரு சிலசான்றுகளை இங்கு சுருக்கமாகக் கொடுத்துள்ளோம். விரிவாகத் தெரிந்துகொள்ள மூல ஆதாரங்களாகக் குறிக்கப்பட்ட நூல்களைப் படிக்க வேண்டுகிறோம். இவைகள் ஏற்கனவே தனித்தனியாக மள்ளர் மலர் திங்களிதழ்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

குறிப்புகள்:- *தெ.க.26/360* - தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி *4* எண் *135* என்பதைக் குறிக்கும் (South Indian Inscriptions.)

**மள்ளர் குலம்**

*1.* திருவள்ளூர் மாவட்டம் கூவம் ஊரில் உள்ள திருப்புராந்தகேசுவர் கோயில் கல்வெட்டு (*தெ.க. 26/360*) "ஸ்வஸ்திஸ்ரீ உடையார் திருவிற்கோலமுடைய நாயனார்க்கு கோவிதானப்படிக்கு **திரும(ப)ள்ள வீரசோழப் பேரையன் மகன் அத்திப்பேரையன் பக்கல்** இக்கோயிற் சிவபிராமணஹாம் இ... பொலியூட்டுக் கொண்டு எரிக்கக் கடவோமாக சந்தி விளக்கு ஒன்று........." என்று கூறுகிறது. திருமள்ள வீரசோழப் பேரையன் மகன் அத்திப்பேரையன் தானம் கொடுத்ததைக் குறிப்பிடும் இக்கல்வெட்டில் 'ம' என்ற எழுத்திற்கு மேல் 'ப' என்ற எழுத்தும் வெட்டப்பட்டுள்ளது. மள்ள, பள்ள என்பது ஒரு சமூகத்தையே குறிக்கிறது என்பதை இது காட்டுகிறது.

*2.* காஞ்சிபுரம் வைகுந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டு (தெ.க.4-/135 பகுதி சி) **'குல மல்லர்'** என்று கூறுகிறது. அதுவருமாறு: **அதுக்கு ஹிரண்யவர்ம்ம மகராஜர் குல மல்லரயு கூவி வினவ...**

*3.* சிதம்பரம் நடராசர் கோயில் கல்வெட்டு (*தெ.க. 6/225*)

**........................ தொண்டையர்கோன் மன்**

**மல்லக் குல வரையால் நூற்றுக்கால் மண்டபத்தே** என்று கூறுகிறது. இங்கும் மல்லர் என்பது ஒரு குலம் என்று கூறப்படுகிறது.

*4.* தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி ஜயங்கொண்டநாதர் கோயில் கல்வெட்டு (*தெ.க. 6/37*) "ஆகோ **மல்லகுல** கால வாய்க்காலுக்கு வடக்கு" என்று கூறுகிறது. மல்லர் என்பது ஒரு குலம் என்பது சுட்டப்படுகிறது. மல்லர் குலத்தினர் பெயரில் வாய்க்கால் உள்ளது.

**5.** கம்பராமாயணம் எழுதிய கம்பர் தமது கம்பராமாயணத்தில் மள்ளர் குலம், மள்ளர் இனம் என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார். பாலகாண்டம் நாட்டுப்படலம் *32* ஆவது பாடலில் **"குன்றுடைக் குல மள்ளர் குழுஉக் குரல்"** என்றும், யுத்தகாண்டம் வானரர் களம் காண் படலம் *25*-ஆவது பாடலில் **"கடும் பகடு படி கிடந்த கரும் பரப்பின் இன மள்ளர் பரந்த கையில்"** என்றும் கூறி மள்ளர் என்பது ஒரு குலம், ஒரு இனம் என்றும் அவர்கள் உழவர்கள், வேளாளர்கள், போர் மறவர்கள், மன்னர்கள் என்றும் போற்றுகிறார். பாலகாண்டம் ஆற்றுப் படலம் *18*-ஆவது பாடலில் **"காத்தகால் மள்ளர்.............கோத்த கால் ஒன்றின் ஒன்று குலம் எனப் பிரிந்தது அன்றே"** என்கிறார். சேர, சோழ, பாண்டியர் என, வாய்க்கால்கள் போல் பிரிந்து சென்று, மள்ளர் குலத்தினர் நாட்டை செழிக்கச் செய்தனர் என்கிறார்.

6. முக்கூடற்பள்ளு (பாடல் 13) மள்ளர் குலத்தில் வரினும் இரு பள்ளியர்க்கோர் பள்ளக் கணவன் எனக் கூறும். முக்கூடற்பள்ளுக்குப் பாயிரம் எழுதிய தியாகராயக் கவிராயர் செவ்வியார் மள்ளர்கள் தேவியர் பள்ளியர் எனக்கூறுவார்.

7. தியாகராசலீலை, திருநாட்டுப் படலத்தில் (பா.101) திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை உழுதொழில் வல்ல மள்ளர் தமது குலக் கூாசெல்லாம் மாதர் சீரடிச் சிலம்பில் மணி பதிக்கச் செலவிடுவார்கள் என்பார்.

8. மள்ளர் தாம் பள்ளர் எனக் கூறும் புலவர்கள், தமிழறிஞர்கள், வரலாற்றறிஞர்கள் : எம். சீனிவாச அய்யங்கர் (Tamil studies, பக்கம்76), டாக்டர் வின்கவேஸ்லின் தமிழ் ஆங்கில அகராதி (பக்கம் 745), டி.கே. வேலுப்பிள்ளை (Travancore State Manual, 1940), டாக்டர் ஜி. ஒப்பர்ட்,(Dravidians, The Original Inhabitants of India, பக்கம்-101), மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் (செந்தமிழ்ச் செல்வி 1975 ஏப்ரல்), பண்டித சவரிராயர் (ந.சி. கந்தையா பிள்ளை, தமிழர் சரித்திரம் பக்கம் 206), சோ. இலக்குமிரதன் பாரதி (நமது சமூகம், பக்கம் 218), சேலம் மாவட்டக் குடிக்கணக்கு (1961 Census of India, vol. IX, Madras Part VI, Village Survey, Monograph, Kanakkangiri Village, Salem District), டாக்டர் கே. ஆர். அனுமந்தன் (Untouchability, A Historical Study,பக்கம் 100), அறிஞர். இரா. தேவ ஆசிர்வாதம் (பள்ளர் அல்லர் மள்ளர் ஆம் மன்னர்), வீரமாமுனிவர் (தேம்பாவணி, நாட்டுப் படலம் பாடல் 32), கவிராக்ஷச ஸ்ரீகச்சியப்ப முனிவர் (பேரூர்ப் புராணம்), பேரூர்ப் புராணத்திற்கு பொழிப்புரை எழுதிய திருவாவடுதுறை ஆதின வித்துவான்கள் ச. தண்டபாணி தேசிகர், சித்தாந்த சைவமணி த.க. மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோர் மள்ளர் என்பதற்குப் பள்ளர் எனப் பொருள் கண்டு எழுதியுள்ளனர். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர் குழு, செந்தமிழ் ஞாயிறு வித்வான் ந. சேதுரகுநாதன் (முக்கூடற்பள்ளு), சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் இரத்தினவேலு முதலியார் (திருவிளையாடற் புராணம் பொழிப்புரை குப்புசாமி நாயக்கர் பதிப்பு - 1897).

9. மள்ளர் என்ற மரபுப்பெயர் கொண்ட சங்கப் புலவர் பெருமக்கள், 1.மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் (நற்றிணை 297,321, குறுந்தொகை 188, அகநானூறு 33,144,174,244,353, புறநானூறு 388) 2. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார் (அகநானூறு 314), 3. அம்மள்ளனார் (நற்றிணை 82) 4. கடுவன் மள்ளனார் (குறுந்தொகை 82), 5. மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் (அகநானூறு 354), 6. மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் (அகநானூறு 70,256), 7. கடுவன் இளமள்ளனார் (நற்றிணை 150), 8. மள்ளனார் (நற்றிணை 204), முதலியோர் ஆகும். மல்லர் என்ற புலவர் திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். (பொருள்.1538)

மேலே கூறப்பட்ட பல செய்திகளும் மள்ளர் என்பது ஒரு குலம் என்பதையும் மள்ளர் என்பது பள்ளரின் முந்தைய பெயர் என்பதையும் உறுதிப்படுத்தும்.

## மள்ளர், குடும்பர் குல வேந்தர், குறுநில மன்னர், அரசு அதிகாரிகள் கொடை வள்ளல்கள்

**1.** கரைவழிநாட்டு கண்ணாடிபுத்தூர் (உடுமலைப் பேட்டை வட்டம்) கல்வெட்டு (தெ.க. 26/223). நிலம் கொடை அளித்த குடும்பர். **குடு(ம்)பரில் சிங்கன் சோழனான அனுத்திரப்பல்லவரையன் ஆவார்.**

**2.** வடஆர்க்காடு மாவட்டம், வாலாஜாபேட்டை வட்டம் திருமல்லபுரம் விஷ்ணு கோயில் கல்வெட்டு (-தெ.க.22/300 (கி.பி.932-33)). நந்தா விளக்கு வைப்பதற்கு சாவா மூவாப்பேராடு கொடையளித்த மள்ளர் **வேளாநாட்டு பொக்கணத்தான் தேவன் கேசரியான குஞ்சரமல்லப் பல்லவரையன்**

**3.** சோழ மண்டலம் பூவாலகுலவல்லி வளநாட்டு வேண்ணாட்டு பிரமதேயன் திருநலம் கல்வெட்டில் -(தெ.க. 26/693) (கி.பி.943-44). அரசு அதிகாரியாக **பணிக்க செம்பியதரையன்** குறிப்பிடப்படுகிறார்.

**4.** வடஆர்க்காடு மாவட்டம், வாலாஜாபேட்டை வட்டம் திருமால்புரம் மணிகண்டேசுவரர் கோயில் கல்வெட்டு (தெ.க. 22/298) (கி.பி.943-44). நிலம் விற்றுக் கொடுத்த அதிகாரி **கடகன் குஞ்சரமல்லனாகிய சோழமாராயன்** என்கிறது.

**5.** திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், கீரனூர் கல்வெட்டு -(தெ.க.5/278). நட்டுவப்புறமாக கோயிலுக்கு நிலம் கொடை அளித்தவர் **குடுமரில் (குடும்பரில்) சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளர்.**

**6.** தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு பஞ்சானதீசுவரர் கோயில் கல்வெட்டு -(தெ.க.5/521) (கி.பி.1009). இராசராச சோழ மள்ளரின் மனைவி ஒலோகமாதேவியார் சார்பாக நிர்வாகம் செய்பவர் **அதிகாரிச்சி எருதன் குஞ்சரமல்லி**

**7.** செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம் கூவம் திருப்புராந்தககேசுவர் கோயில் கல்வெட்டு -(தெ.க.26/360). சந்தி விளக்கு வைத்தவர் **திரும(ப)ள்ள வீரசோழப் பேரையன் மகன் அத்திப்பேரையன்**

**8.** ஆந்திர மாநிலம், அனந்தப்பூர் மாவட்டம், மாதகச்சிரா வட்டம் ஹேமாவதி ஊரில் உள்ள தூண் கல்வெட்டு -(தெ.க.6/553). அரசராக **ஸ்ரீ மாஹேஸ்வரன் திரிபுவனமல்ல மல்லிதேவ சோழ மஹாராஜரை (திரிபுவனச் சக்ரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர்)** குறிக்கப்படுகிறார்.

9. கன்னியாகுமரி மாவட்டம் வாரியூர் தென்னந்தோப்புக் கல்லில் குலோத்துங்க சோழதேவரின் 41-ஆம் ஆட்சியாண்டு. உப்பள உரிமையாளர். புறத்தாநாட்டு வாரியூரான பராக்கிரம சோழப் பேரளத்து குடும்பன் வில்லியம்பலவனான இரண்டாயிரச் சித்திரவல்லி. (-Travancore Archaeological Series VOL. I Edited by T.A. GopinathaRao, PP: 355-356. Reprint 1988).

10. கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் வட்டம் சூலூர், செலக்கிரிச்சல் கல்வெட்டு. (மள்ளர் மலர் மே 2002, தினமணி, தினத்தந்தி, தினமலர் 13.5.2002 The New Indian Express 10.5.2002). கோயில் மண்டபம் கட்டிக் கொடுத்த குடுமிச்சி. கீரனூரில் இருக்கும் ஐங்கைக் குடுமிச்சிகளில் சோழன் உமையான அணுத்திரப் பல்லவரைசி.

11. முற்கால குடும்பர் குல பாண்டிய வேந்தர் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி (வேள்விக்குடிச் செப்பேடு).

12. நெற்குன்றம் சிலையம்மாள் கோயில் கல்வெட்டு. (தெ.க.3/93) (கி.பி. 906க்கு முன்). தனது செலவில் ஏரியை மராமத்து செய்து அளித்த மள்ளர் நிருபதொங்கமங்கலப் பேரையர் மகனார் நம்பிய மல்லனார்

13. பழனிவட்டம், கீரனூர் கல்வெட்டு. -(தெ.க.5/266, பார்க்க தெ.க.5/278). பொன் ஆபரணங்கள் திருவாகீசுவரமுடையார் கோயிலுக்கு அளித்த குடும்பர் கீரனூரான கொழுமங்கொண்ட சோழநல்லூர் உடையார் குடும்பர் சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளன் மணவட்டி இளையாண்டி.

14. தஞ்சாவூர் மாவட்டம் , திருவையாறு, பஞ்சநதீசுவரர் கோயில் கல்வெட்டு. (-தெ.க.5/535, 5/650). நிலம் வாங்கி கோயிலுக்கு கொடை அளித்த மள்ளர் பாம்புணிக் கிழான் மல்லாண்டானான சேரகோன்

15. திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், திருமழுவாடி வைத்தியநாதர் கோயில் கல்வெட்டு. (தெ.க. 5/635). கோயிலுக்கு விளக்கெரிக்க நெய் கொடுக்க சாவாமூவாப் பேராடுகளை ஏற்றுக் கொண்ட மள்ளர்கள் குஞ்சிரமல்லன் பெருவழி, குஞ்சிரமல்லன் காடன், குஞ்சிலமல்லன் திருமால்

16. விளக்கெரிக்க கோயிலுக்கு நெய் தொடர்ந்து வழங்க பொறுப்பு ஏற்றுக் கொண்ட மள்ளர். -(தெ.க. 5/640) மல்லன் சிங்கம்

17. கோயமுத்தூர் மாவட்டம் பேரூர் பட்டீசுவர மள்ளர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 5/240). பட்டீசுர மள்ளர் கோயிலுக்கு நந்தவனம் ஏற்படுத்திக் கொடுத்த குடும்பர் தென்வழிநாட்டு ஏழூர் ஊராளி தென் குடும்பரில் சிங்கன் சோழனான அணுத்திரப் பல்லவரையன்.

18. திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் கீரனூர் கல்வெட்டு. (தெ.க. 5/573, 5/278, 5/266). கோயிலுக்கு நிலம் கொடை அளித்தவர் குடும்பர் சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளர் பெண்டுகளில் கருவூர் திருநிலை ஆண்டாள் அரவி கூத்தாண்டி

**19.** காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 4/816). நெய்க்காக கோயிலுக்கு பசுக்கள் 32 கொடை அளித்தவர். திரிலோகய மல்லன், கிரிதுர்க மல்லன், புவனேகநேத்திரன் வைதும்ப மகாராஜன் ராஜேந்திர சோழ மும்முடி விஷ்ணுதேன் துரை அரசன்

**20.** காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 4/135 பகுதி சி.). போருக்குச் செல்ல ஒப்புக்கொண்ட பரமேசுவர மல்லர். அதுக்கு ஹிரண்யவர்ம்ம மகராஜன் குல மல்லரையும் கூவி வினவ ஆரும் போகராத்தம் மகன் ஸ்ரீ மல்லனு, ரண மல்லனு, சங்கராம மல்லனு என்பார்கள் வினவ குடு என்பர் நி....தாமரவோ செய்வர் நாம் போகோமென பந்தாபந்தா மருப்ப... வ மல்லனான பரமேஸ்வர நான் போவனென்று தொழுது நின்ற இடம்

**21.** திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 3/95, பகுதி 3, கி.பி.910). கோயிலுக்கு விளக்கு வைக்க பொன் கொடை அளித்தவர். கற்பூண்டி நாடுடைய பரபூமிகன் மல்லனாகிய கண்டராதித்தப் பல்லவரையன்

**22.** தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் கீழூர் வீரட்டானேசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 7/894,895). நொந்தா விளக்கு கொடை அளித்த மள்ளர் கற்பூண்டி நாடுடைய பரபூமிகன் மல்லனாகிய கண்டராதித்தப் பல்லவரையன்

**23.** திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் ஆலம்பாக்கம் கைலாசநாதர் கோயில் கல்வெட்டு. -(தெ.க.26/769, கி.பி. 1064-65). கோயிலுக்கு செந்நெல் நடைப்புறமாக விட்ட நிலத்தின் அதிகாரி. கடிகை மத்தியஸ்தன் மல்லடிகள் பொற்றாழியான் சாதுப் பிரியன்.

**24.** செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் உத்திரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 6/317). சென்னெல் நடைக்கு நிலம் கொடை நிர்வாக அதிகாரி மத்தியஸ்தன் சிவதாசன் சிவமல்லனாகிய ஐயாயிரத்து இருநூற்றுவ மங்கலப்பிரியன்

**25.** ஸ்ரீரங்கம், ரங்கநாதர் கோயில் கல்வெட்டு. -(தெ.க.24/319). மல்லாயி அவ்வையார் வரி இருந்தது பற்றிய செய்தி உள்ளது.

**26.** புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம் பொன்னமராவதி சுந்தரராசப் பெருமாள் கல்வெட்டு. -(தெ.க. 26/19). கோயில் சேவகராக எம்பெருமானடியாள் மல்லாயி இருந்துள்ளார்.

**27.** தென்ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் திருவாமத்தூர், அபிராமேசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 12/141,12/142, அணியன் என்பது தேவேந்திர குல வேளாளரில் ஒருபிரிவு). நிலம் கொடை அளித்த மள்ளர் அணியன் மூவேந்தரையன்

**28.** மேலது கோயில். -(தெ.க. 12/143). திருவிளக்குப் புறமாக நிலம் கொடை அளித்த மள்ளர் அணியன் மூவேந்தரையன் மகன் அழகியசியன் மூவேந்தரையன்

**29.** தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் சின்னமனூர் லட்சுமி நாராயணர் கோயில் கல்வெட்டு. - (தெ.க.23/446). கோயிலுக்கு நந்தா விளக்கு கொடை அளித்த மள்ளர் பரநிருபகேசரிநல்லூர் அணியனப்பன்

**30.** கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை வட்டம் சங்கிராமநல்லூர் சோழீசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 26/145, கி.பி. 1206). கோயிலுக்கு நிலம் கொடை அளித்த மள்ள அதிகாரி குடும்பர் அனுத்திரப் பல்லவரையன்

**31.** தென் ஆர்க்காடு மாவட்டம் கடலூர் வட்டம் திருவயிந்திரபுரம் (தேவேந்திரபுரம்) தேவநாயகப் பெருமாள் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 7/764). அமுது செய்து சேவிக்க நெல் கொடை அளித்த மள்ளர் சோழ குலவல்லி நல்லூர் எய்தனூர் மெய்கிழான் சேனன் திருவயிந்திரன்

**32.** வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் காளகஸ்தி பக்கம் உள்ள தொண்டம் நாடு கோதண்டராமர் கோயில் கல்வெட்டு, சோழர் கோப்பரகேசரி பன்மரின் 34 ஆவது ஆட்சியாண்டு. (-தெ.க.8/529). இந்திர விழா நடந்த செய்தி. இந்திர விழாவினுக்குமாக ஏழு விளக்கினுக்கு நெய் அளித்துள்ளனர்.

**33.** போளுர் திருமலையில் வண்ணச் சித்திரங்கள் உள்ள குகைக்குக் கீழே உள்ள சிறிய கோயில் கல்வெட்டு. (-தெ.க.1/73). ஆசிரியராக மல்லர். திருமலை பரவாதி மல்லர் மாணாக்கர் அரிஷ்டனேமி ஆச்சார்யார் செய்வித்த யக்ஷித் திருமேனி

**34.** திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் பெரியகோட்டை சோளீசுவரர் கோயில் பிரகதாம்பாள் சன்னதி கல்வெட்டு. -(தெ.க. 23/464). கொடை அளித்த மல்லம்மை. தேவ....டான் மனைக் கிழத்தி மயிர்பாலர் மகள் மல்லம்மை

**35.** ஸ்ரீரங்கம் திருவரங்கநாதர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 24/65). மல்லி நந்தவனம், மல்லி விளாகம் கொடை அளித்த மள்ளர். பொன்பற்றிவுடையாள் அரையன் சேஞனான் ராஜேந்திர சோழ அதியமானுக்கு கொடுத்த திருமல்லிநாடி விளாகம், திருமல்லிநாடி திருநந்தவனம்

**36.** சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில். (-தெ.க. 8/178,8/179, (கி.பி. 1098)). நிலம் விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த மள்ளர். கீழக் கோட்டையாளன் கலங்காத கண்டநல்லூர்த் தேவன் தொங்கனான மாளவ தேவேந்திரப்ப அரையன் - சக்ரவர்த்தி மல்லனான அஞ்சாத சுங்கராயன்.

**37.** திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டம் மாறமங்கலம் சந்திரசேகர் கோயில் கல்வெட்டு. (-தெ.க. 8/445). நந்தா விளக்கிற்கு நிலம் விற்றுக் கொடுத்த மள்ளர் தெய்வேந்திரப் பேரரயன்

**38.** மேலது கோயில். -(தெ.க. 8/446,447,499, 451, 452, 453, 454). தேவேந்திர குலத்தினர் பெயரில் சதுர்வேதி மங்கலம் அமைத்தல். **மாறமங்கலமான தேவேந்திர வல்லப சதுர்வேதி மங்கலம்**

**39.** தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு பஞ்சாண்டீசுவரர் கோயில் உத்திர கைலாசர் சன்னதி கல்வெட்டு. -(தெ.க. 5/518). நிலக்கொடையில் சாட்சியான அரசு அதிகாரி **திருவையாறுடையார் நட்டவன் மல்லனரியப்பன்**

**40.** செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டம் திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 5/1359). பாழ்பட்ட நிலத்தை சீர்செய்து கொடுத்த மள்ளர் **திருவாஞ்சியமுடையான் ஆட்கொண்டான் மல்லகோ**

**41.** ஸ்ரீரங்கம் திருவரங்கநாதர் கோயில் கல்வெட்டு (குலோத்துங்க சோழன் I காலம் - கி.பி.1083). -(தெ.க. 24/55). மல்லி நந்தவனம், மல்லி விளாகம் கொடை அளித்த மள்ளர் **மதுராந்தகன் ஆன ராஜேந்திர சோழ கிடாரத்தரையர்**, இவர் பெண்டாட்டி **ராஜகேசரிவல்லி**. இவர்கள் பெயரில் **மதுராந்தக விளாகம் - மல்லிவிளாகம் மதுராந்தக திருநந்தவனம் - மல்லி திருநந்தவனம்** ஏற்படுத்தப்பட்டது.

**42.** திண்டுக்கல் மாவட்டம் கூடலூர் அழகிய பெருமாள் கோயில் குலசேகரப் பெருமாள் சன்னதி கல்வெட்டு. -(தெ.க. 23/420). கோயில் சார்பாக நிலம் பெற்ற மள்ளர் **நெடுமாக்கல் பணிக்கர்**

**43.** காஞ்சிபுரம் வட்டம் சின்னக் காஞ்சிபுரத்தில் அருளாளப் பெருமாள் கோயில் கல்வெட்டு (சோழன் ராஜாதி ராஜ தேவர் காலத்தியது). -(தெ.க.4/861). நந்தவனத்திற்கு நிலம் கொடை அளித்த மள்ளர் **கங்க மண்டலத்து மகாமண்டலிகள் சோழமாராசன் கம்டி நுளம்பன் ஸ்ரீமன்னு புசபலவீரன்ஆகோ மல்லரசன்**

**44.** தென் ஆர்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் சித்தலிங்க மடம் வியாக்கிரபாதீசுவரர் கோயில் கல்வெட்டு (சோழ மள்ளர் ராஜராஜ தேவர் காலம், கி.பி. 1164-65). -(தெ.க. 26/432, 26/435). நிலக் கொடை அளித்த மள்ளர் **திருமுனைப்பாடி கிளியூர் மலையமான் அத்திமல்லன் சொக்கப் பெருமாளான ராஜ கம்பீரச் சேதிராயன்**

**45.** திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் கீழப்பழுவூர் வாதமூலீசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 5/680). நந்தா விளக்கு கொடை அளித்த மள்ளர் **தொண்டிநாட்டு மணலூருடையான் மல்லன் கல்லறை**

**46.** தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருவலஞ்சுழி கபாதீசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 8/223). அரசு அதிகாரி. **சேந்தன் மல்லன்**

**47.** தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் கீழூர் வீரட்டானேசுவரர் கோயில் கல்வெட்டு. -(தெ.க. 7/859). நந்தா விளக்குக் பொன் கொடை அளித்த மள்ளர். உடைக்கா நாட்டு வயிரமேக சதுர்வேதி மங்கலத் திருக்கு மல்லண்ணாவன்

**48.** திண்டிவனம் வட்டம் திண்டிவனம் திண்டீசுவரர் கோயில் கல்வெட்டு (சோழ மள்ளர் ராஜராஜன் I, கி.பி. 1003). (தெ.க. 7/156). கோயிலுக்கு கொடை வழங்கிய நிலக்கிழார். மல்லன் பராதயன்

**49.** தென் ஆர்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் கீழூர் வீரட்டானேசுவர் கோயில் கல்வெட்டு (மள்ளர் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர் II, கி.பி. 1072). -(தெ.க. 7/877). விளக்கு வைக்க பசு 16 கொடை அளித்த மள்ளர். கோதண்டன் கண்டனான மதுராந்தக வளநாடான்வானின் சிற்றப்பன் உபகாரி மல்லன்

**50.** தஞ்சாவூர் மாவட்டம் திருச்சென்னம்பூண்டி சடையார் கோயில் கல்வெட்டு (சோழ மள்ளர் பராந்தகன் I, கி.பி.941). (தெ.க. 7/512) மள்ளருடைய மனைவி அரசன் மகளாவார். இவ்வூருடையான் குணகல்வன் வீரமல்லன் மனைவாட்டி அரசன் கொற்ற பிராட்டி

**51.** திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் பாப்பன் குளம் ராமசாமி கோயில் கல்வெட்டு (கி.பி. 1238-39). (தெ.க. 23/124) திருமல்லிநாடு என்ற நாடு குறிப்பிடப்படுகிறது.

**52.** திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் மேலப் பழவூர் அகத்தீசுவரர் கோயில் கல்வெட்டு. (தெ.க. 13/227) பழவூர்ச் சங்கரபடி மல்லன் கங்கன் கொடை பற்றிக் குறிப்பிடுகிறது.

**53.** தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் பண்டாரவாடை தேவராயன்பேட்டை மத்தியபுரீசுவரர் கோயில் கல்வெட்டு (சுந்தர சோழ மள்ளரின் 6-ஆம் ஆட்சியாண்டு). -(தெ.க. 13/15) கோயிலுக்கு கொடை வழங்கிய மள்ளர். கருகாவூர் கிழவன் வேளான் குஞ்சிர மல்லன் மகன் குஞ்சிர மல்லன் கண்டராபணனான கணபதி

**54.** கேரள மாநிலம் வடநாடு மாவட்டம் எடக்கல் மலைக் குகைக் கல்வெட்டு. (-இந்தியத் தொல்லியல் துறை ஆண்டறிக்கை 1897 எண் 120-123, E. HULTSCZH) சேர வேந்தர் குடும்பர் குலத்தினர் என்று கூறுகிறது. விஷ்ணுவர்ம்ம குடும்பிய குல வர்த்த நஸ்ய லிகித (விஷ்ணு வர்மனின் குடும்பர் குலம் வளர எழுதியது)

**55.** கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம், கம்பயநல்லூர் தேசிகாதீசுவரர் கோயில் கல்வெட்டு. (தெ.க. 7/11) அதிகாரி மல்லணர் என்ற மள்ளர் குல அரசு அலுவலர் பற்றிக் கூறுகிறது.

**56.** காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலம் ராஜகோபால பெருமாள் கோயில் கல்வெட்டு (சோழமள்ளர் ராஜராஜ தேவர் III, கி.பி.1234). (தெ.க. 3/39,41). கொடையாளர் மள்ளர் குலத்தவர்.

மணிமங்கலமுடையான் பஞ்சநெதி இலட்சுமணன் மலைக்கினிய நின்றான் பிரமபிரியின் பெரியபிள்ளை இவன் தம்பி ஆகவமல்ல தேவன்

**57.** இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையின் ஆண்டறிக்கை கி.பி. *1904-05* பக்கங்கள் *139-142*-இல் கொடுக்கப் பட்டுள்ள உத்திரமேரூர்க் கல்வெட்டு. -(Archacological Survey of India, Annual report 1904-05. PP 139-142). குடும்பு ஆட்சி முறை பற்றிய வெட்டு. மள்ளர் குல அரசன், அரச அதிகாரி. 1. தேவேந்திரன் சக்ரவர்த்தி பண்டித வத்சலன் குஞ்சர மல்லன் சூர சூளாமணி கல்பக சரிதை ஸ்ரீ பரகேசரி பன்மர் ஸ்ரீ வீர நாராயணன் ஸ்ரீ பராந்தக தேவன் 2. மத்தியஸ்தன் காடாடிப் போத்தன் சிவகுறி இராஜமல்ல மங்கலப் பிரியன்

**58.** திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் மன்னார்கோயில் விஷ்ணு கோயில் குலசேகரப்பெருமாள் சன்னதி கல்வெட்டு. ARE No.398 of 1916, Reported in the book 'Rejendra Vinnagar' by R. Thirumalai, Published by the Institute of Epigraphy. Tamil Nadu State, Dept. of Archaeology, 1980 (TNDA Pub No.66). மள்ளர் குல சேனாதிபதி, அதிகாரி. 1. வடவாறி நாட்டு உரிமையழகியானில் பரிக்கிரகம் தேவேந்திர வல்லவன், 2. தேவேந்திரப் பல்லவரையன்

**59.** காஞ்சிபுரம் காமாட்சியம்மன், ஏகாம்பரநாதர், காளிகாதேவி மற்றும் உண்டான கோயில் நிர்வாகிகள் விருதுப் பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த செப்புப் பட்டயம். *23* பேர்கள் கையெழுத்திட்டுள்ளனர். (கி.பி. *1301*). -(காஞ்சி காமாட்சியம்மன் கோயில் செப்புப் பட்டயம். மள்ளர் மலர் பிப்ரவரி *2001*). கலந்து கொண்ட நிர்வாகிகள், கையெழுத்திட்ட மள்ளர்கள்: தேவேந்திரப் பள்ளரில் வெள்ளானை வேந்தன், மிக விருது பெற்றவன். சேத்துக்கால் சென்னன், சென்னல் முடிக்காவலன், தேவேந்திர வர புத்திரன், மண்வெட்டி கொண்டு மலையைக் கடைந்த கண்ணன், வெள்ளானைக் கொடி படைத்தவன், வெள்ளைக்குடை, முத்துக் குடை, பவளக்குடை, பஞ்சவர்ணக் குடை, முகில் கொடி, புலிக்கொடி, அலகுக்கொடி படைத்தவன். தெய்வப் பொன்முடி தேவேந்திரனுக்குக் கொடுத்து இருகால் சிலம்பு வெகு விருது பெற்றவன் தேவேந்திரப் பள்ளன். காஞ்சிபுரத்துப் பண்ணாடி, சின்னக் காஞ்சிபுரம் நாகப் பண்ணாடி, சர்வதீரத்து வீதி முத்துப் பண்ணாடியும் செஞ்சி நகரம் அரசப் பண்ணாடியும் தஞ்சாவூர் சீரங்க மூப்பன் திருச்சிராப்பள்ளி மூக்க மூப்பன் திருவெங்கிமலை நயினார் குடும்பன் மதுரை நாராயணக் குடும்பன், ஸ்ரீவில்லிபுத்தூர் காந்திமதி காலாடி, திருச்செங்கோடு பழனிப் பண்ணாடியும் தேவேந்திர கூட்டத்தின் பெரியோர்களும். காஞ்சிபுரம் பரம நாகப் பண்ணாடி ஒப்பிதம், ஸ்ரீவதிரத்து முத்துப் பண்ணாடி ருசுவு, மதுரை நாராயணக் குடும்பன் ஒப்பிதம் ஸ்ரீவில்லி புத்தூர் காந்திமதி காலாடி ருசுவு.

**60.** சிவகங்கை குடும்பர்கள் செப்பேடு : முத்து வடுகநாத பெரிய உடையாத் தேவரும் குடும்பர்களும் செய்து கொண்ட ஒப்பந்தம், சிவகங்கை சசிவர்ண ஈசுவரன் கோயிலுக்கு திருவிழா வரி

செலுத்துவது சம்பந்தமாக. - (சிவகங்கை குடும்பர்கள் செப்பேடு சிவகங்கை சீமை, எஸ்.எம்.கமால், மள்ளர் மலர் மே 2001). **வெள்ளாண்மை உலகில் வியனப்பேர் விளைய வள்ளல் தெய்வேந்திரன் வரிசைகள் அனுப்ப வெள்ளானை மீதில் விதை வகை முழுதும் உயர் தெள்ளிய புகழ் சேர் சேறாடிக் குடையும் செகத்தில் கொணர்ந்த தேவேந்திரக் குடும்பர் சேத்துக்கால் செல்வரான குடும்பர்களும்** எனக் கூறுகிறது.

**61.** கோயமுத்தூர் மாவட்டம் அன்னூரில் மன்னீசர் கோயில் கல்வெட்டு. (ARE 586/1922, கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் டாக்டர் இரா.ப. கருணானந்தன், தொகுப்பு கையெழுத்துப்படி. பக்கம் 317 எண் 576, மள்ளர் மலர், ஜுன் 2001). அமுதுபடிக்கு காசு கொடை அளித்தவர். **வல்லங்கிழான் மல்லன் அழகிய திருச்சிற்றம் பலமுடையாளான முனையதரன்.**

**62.** விருதுநகர் மாவட்டம் இராசபாளையம் அருகில் உள்ள முதுகுடிக் கல்வெட்டு (பாண்டியன் குலசேகர தேவரின் 34-ஆம் ஆட்சியாண்டு). -(கொங்கு 1972, ப.301). ஏரிகாத்து உயிர் தியாகம் செய்தவர். **இவ்வூர் குடும்பரில் பெரிய தேவப் பள்ளன்**

**63.** மதுரை திருப்பரங்குன்றம் சமணக் குகைக் கல்வெட்டு. (2000 ஆண்டு பழமையுடைய தமிழி எடுத்துக்கல்வெட்டு). சமணத் துறவிகளுக்கு கல்படுக்கை செய்த கொடுத்த மள்ளர். **எருக்காட்டூர் இளகுடும்பிகன் போலாலயன்.**

**64.** இலங்கை, திஸ்ஸ மஹரம அருகில் உள்ள அகுரு கொட என்னும் ஊரில் கிடைத்த கி.மு 3-கி.பி 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காசில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம். (-தென் இலங்கையில் பழந்தமிழ் நாணயங்கள், ஐராவதம் மகாதேவன், ஆவணம் இதழ் 11,2000, பக்கம் 117. தமிழக தொல்லியல் கழகம். தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்). மல்லர் பெயரில் காசுகள் அச்சிடப்பட்டது. **மல்ல சாத்தன்** என்ற பொறிப்பு.

**65.** கரூர் மாவட்டம் கரூரிலிருந்து வடக்கே 10 கி.மீ. தொலைவில் வாங்கல் என்ற ஊரில் உள்ள வாங்கலம்மன் கோயில் கல்வெட்டு. (இர.செயராமன் வாங்கல் மற்றும் செட்டிபாளையம் கல்வெட்டுகள் ஆவணம் இதழ் 11, 2000.ப.105 தமிழகத் தொல்லியல் கழகம்,)

துவாரபாலக்களின் சிலைகள் செய்து அமைத்த மள்ளர் **அரியான் மூப்பன் மகன் சின்ன அரியான் மூப்பன்.**

**66.** புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பையூர் தேவேந்திர சோளீஸ்வரமுடைய நாயனார் (பொன்வாசி நாதர்) கோயில் கல்வெட்டு (சுந்தர பாண்டிய தேவர் காலத்தியது). -(திரு. இராசேந்திரன், இலுப்பையூர் கல்வெட்டுகள், கட்டுரை ஆவணம் இதழ் 12, சூலை 2001, தமிழகத் தொல்லியல் கழகம்)

இக்கோயில் தேவேந்திர சோளீஸ்வரமுடைய நாயனார் கோயில் என்றும் தேவுந்திருவுடைய நாயனார் கோயில் என்றும் அழைக்கப்பட்டது. காணியுடைய இளமக்கள் தேவன் திருவான வாயுடையானான குலோத்துங்க சோழ நாடாள்வான், இவன் தம்பி உத்தமாண்டான், பெருமாள் இராசேந்திர சோழ நாடாள்வார், பிள்ளான் பெருங்கருணையாளன், பொன்னாண்டான், விழுமிய முத்தரையன் பெருமாள் பெரிய தேவர் மேற்படி தேவேந்திர முனையன்.

67. சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகில் சொக்கலிங்கபுரம் அழகிய சோழீசுவரர் கோயில் கல்வெட்டு. -(வெ. வேதாச்சலம், சொக்கலிங்கபுரம் அழகிய சோழீசுவரர் கோயில் கல்வெட்டுகள், ஆவணம் 11, சூலை 2000, ப.48, தமிழக தொல்லியல் கழகம்). தேவேந்திர நாட்டு மன்னன். தேவேந்திர நாடாழ்வான் குறிப்பிடப்படுகிறார்.

68. தஞ்சாவூர் ராஜராஜீசுவரம் எனும் பெருவுடையார் கோயில் கல்வெட்டு (கி.பி.985-1014) ராஜராஜ சோழ மன்னர் காலம். (தெ.க. 2/66). நட்டுவம் செய்தவர். கோயில் கட்டிய தலைமைத் சிற்பி. 1. நட்டுவஞ் செய்த மல்லன் இரட்டையன், -2. தச்சாச்சாரியார் வீரசோழன் குஞ்சர மல்லனான ராஜராஜப் பெருந்தச்சன்.

69. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் திருக்கோடிக் காவல் திருக்கோடீசுவரர் கோயில் கல்வெட்டு (பல்லவன் கோவிசய நிருபதொங்க விக்கிரம பன்மனின் காலம்). (தெ.க. 12/78). பொன் கொடை அளித்த மள்ளர். கொண்டநாடுடைய வெட்டுவதி அரையனான மல்லன் வேங்கடவன் கொடுத்த பொன் பதினைங்கழஞ்சு

70. விருத்தாச்சலம் வட்டம் விருத்தாச்சலத்தில் உள்ள விருதகிரீசுவரர் கோயில் கல்வெட்டு (கோப்பெருஞ்சிங்கன் காலம்). (தெ.க. 12/123). விளக்கு நெய்க்கு பசு வளர்த்தவர். மல்லன் ஆளப்பிறந்தி

71. தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி சிவாலயத்தில் உள்ள சோழர் கால இசைக் கருவி குடமுழாவில் பொறிக்கப்பட்ட செய்தி. (கல்வெட்டு இதழ் 7, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை சென்னை, இராட்சச ஆண்டு, ஐப்பசி). குடமுழா கொடை வழங்கிய மள்ளர். சிகாருடையார் மல்லாண்டாரான சோழகோனார்

72. திண்டிவனம் மாவட்டம், கிளியனூரில் உள்ள வைகுந்தவாசப் பெருமாள் கோயில் கல்வெட்டு. (தெ.க. 19/398). நிலக்கிழார் நிலம் விற்று கோயிலுக்கு பொன் கொடுத்த மள்ளர். வேசாலிப்பாடி .....புடைபாக்கமுடையாள் சாத்தன் மல்லடிகள்

73. விழுப்புரம் மாவட்டம் பன்ருட்டி வட்டம் எய்தனூர் ஆதிபுரீசுவரர் கோயில் கல்வெட்டு (குலோத்துங்க சோழ மள்ளர் காலம் கி.பி. 1098-99). (ச. கிருஷ்ணமூர்த்தி, எய்தனூர் முதல் குலோத்துங்கன்

கல்வெட்டு, ஆவணம் 10, 1999, பக்கம் 32, தமிழகத் தொல்லியல் கழகம்). நொந்தா விளக்கு மற்றும் திருவாபரணங்கள் கொடை அளித்த மள்ளர்கள். மெய்கிழான் திருவயிந்திரன் சேனன். எய்தனூர் மெய்கிழான் திருவயிந்திரன் வீரையன்

74. கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் எடக்கல் மற்றும் செருபுழா வடமொழிக் கல்வெட்டுகள். (-கல்வெட்டு 52 (சனவரி 1999), பக்கம் 20-25 தமிழ்நாட்டு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை.). கடும்மி புத சேர என்பதில் கடும்மி என்பதற்குப் பொருள் இல்லை. குடும்மி என்பது கடும்மி என்று தவறாகப் படிக்கப்பட்டுள்ளது. சேர மன்னர்கள் குடும்பர் குலத்தினர் என்பது தெரிகிறது. குடும்மி புத சேர என்பதை குடுமியின் புதல்வர் ஆகிய சேரர் என்று பொருள் கொள்ளலாம்.

75. புதுக்கோட்டை மாவட்டம், திருமய்யம் வட்டம் ஒலியமங்கலம் வரகுணீசுவரர் கோயில் கல்வெட்டு. (-புதுக்கோட்டை சமஸ்தான பழங்கல்வெட்டுகள் எண் 349, (Ancient Inscriptions of Pudukottai State No.349) பக்கம் 222-223). நிலம் வழங்கிய குடும்பர் குல கிழார் திருக்குடுமி வயிராகி

76. புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் காரமங்கலம் அகத்திசுவரர் கோயில் கல்வெட்டு. (-புதுக்கோட்டை சமஸ்தான பழங்கல்வெட்டுகள். எண் 410 பக்கம் 285). குடும்பர் குலத்தினர் குடுமியார் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

77. வீரபாண்டியனின் 3-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட சிவகாசிச் செப்பேடு. கி.பி. 11-ஆம் நூற்றாண்டு. முதலாம் இராதிராசன் காலத்தில் ஆட்சி செய்தவன். செப்பேடு செய்திகள் 1. பாண்டிய பரமேஸ்வரராள் பரம்பரையில் வந்து தோன்றிய மன்னன்கோன் இராசமல்லன் மணிமுடி மானாபரணன் தென்னவர் கோன் வீரகேரளன் வீரபாண்டியன். 2. அணுத்திரப் பல்ல(வ) அரைசெனும் பெயர் பெற்ற மாறஞ் சோலை. 3. அணுத்திரன் திசை (கிழக்கு, தேவேந்திரன் திசை)

78. விஜயாலய சோழீஸ்வரம் கோயிலுக்கு எதிரில் உள்ள குடவரைக் கோயிலை நிருபதுங்க பல்லவன் காலத்தில் சாத்தன் பழியிலி என்பவன் தோற்றுவித்தான். அதற்கு முன்னுள்ள நந்தி மண்டபம், முன் மண்டபம், பலிபீடம் ஆகியவை அவனது மகள் பழியிலிச் சிறிய நங்கை எடுப்பித்தாள். அவள் மல்லன் அனந்தன் என்பானின் மனைவி. விஜயாலய சோழீசுவரத்தின் வாயிலில் துவார பாலகர்களுக்கு மல்லன் விடுமன் திருப்பணி செய்தான். மல்லன் விடுமனும் மல்லன் அனந்தனும் அண்ணன் - தம்பி என்று கொள்ளலாம். (ஓவியப்பாவை, டாக்டர் இரா. நாகசாமி தொல்பொருள் ஆய்வுத் துறை, 1999 சென்னை)

79. பழனிச் செப்பேடு. பழனிமலை முருகனுக்குத் திருப்பணி செய்யவும் தெய்வேந்திர விநாயகர் கோயில் எடுப்பிக்கவும்,

பக்தர்களுக்கு மடத்தில் அன்னதானம் வழங்கவும் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து கூடிய தேவேந்திர வம்ச முக்கியஸ்தர்கள் (காலம் 16-ஆம் நூற்றாண்டு). (மள்ளர் மலர், அக்டோபர், 1998) : குகவேலருளால் குடும்பன் தழைக்க, சிவனருளாலே திருநீறணிந்து, யெல்லா வுலகும் பிறவியுள்ளளவும் தெள்ளிமையாத செந்நெல்லைப் படைத்தோர், சேத்துக்கால்ச் செல்வரான, செந்நெல் முடிக் காவலரான முத்தளக்கும் கையாதிபரான, பாண்டியன் பண்டான பாறதகதபரான, அளவு கையிட்டவரான, மூன்று கைக்குடையாதிபரான, பஞ்ச கலசம் பாங்குடன் வைத்து அஞ்சலித் தேவர்க்கும் அன்னம் படைத்தவரான, மண்ணை வெட்டிக் கொண்டு மலை தகர்த்தவரான, கடல் கலங்கினும் காவேரி வற்றிலும் மலை கலங்கினும் மனங்கலங்காதவரான (வடுகர்களிடம் தோற்றாலும் மனங்கலங்காதவரான) வல்லபரான மாடக்குளத்தில் வந்துதித்தவரான, பரமசிவனுக்குப் பாத பணிவிடை செய்கிறவரான, தெய்வலோகத்தில் தெய்வேந்திரன் பிள்ளைகளாகிய பழனித் தலத்தில் காணியாளனாகிய

கொங்க மள்ளரில் 1. பழனி பழனிப் பன்னாடி, 2. கந்தப் பன்னாடி, கடைய மள்ளரில் 3. தென்பழனி இருளகுடும்பன், மங்கநாட்டு மள்ளரில் 4. பெரியழக குடும்பன், 5. பாலசமுத்திரம் அரியநாச்சிக் குடும்பன், 6. குமாரக் குடும்பன், 7. கலையன்புத்தூர் பெரிய அழகக் குடும்பன், 8. அக்கிரகாரம் அழக குடும்பன், 9. ரெட்டையன்பாடி பாப்பக் குடும்பன், 10. பந்த குடும்பன், 11. கல்லாபுரம் குமார குடும்பன், 12. கொழுமம் குமரலிங்கம் சின்னாத்தா குடும்பன், 13. நயினா குடும்பன்,

14. கன்னாடிபுத்தூர் வெள்ளானைப் பன்னாடி, 15. கறிச்சிப் பன்னாடி, 16. சோழமாதேவி ராக்கப் பன்னாடி, 17. சோழப் பன்னாடி, 18. கனியூர் மூப்பன், 19. காறத்தொழுவு வேல்ப்பன்னாடி, 20. கடத்தூர் குருப்பப் பன்னாடி, 21. அலங்கயம் ராக்கப் பன்னாடி, 22. தனிஞ்சியம் அழகப் பன்னாடி, 23. தாராபுரம் உடையாப் பன்னாடி, 24. வீராச்சிமங்கலம் கன்னாடிபுறுத்தூர் பன்னாடி, 25. கோழிக்கடவு கூழைமலைப் பன்னாடி, 26. ஆயிக்குடி சப்பனி குடும்பன், 27. கருமக் குடும்பன், 28. விருப்பாச்சியில் செவந்தாகுடும்பன், 29. நீலகண்ட குடும்பன், 30. எடையக்கோட்டை எழுவ குடும்பன், 31. பாரைபட்டி பனிக்க குடும்பன், 32. திண்டுக்கல் சனுவ குடும்பன், 33. வலையா குடும்பன், 34. வல்லகொண்டம் நாய்க்கனூரில் வேலக் குடும்பன், 35. தாடிக்கொம்பு குமார குடும்பன், 36.கொத்தபள்ளி கன்ன பலகான், 37. கன்னிவாடி உக்கினிக் குடும்பன், 38. ஆத்தூரில் திம்மக் குடும்பன், 39. கூழப்பநாயக்கனூரில் சின்னாண்டி காலாடி, 40. அம்மநாய்க்கனூரில் அம்மையாக் குடும்பன், 41. மாவுத்தன் காலாடி, 42. வத்தலக் குண்டு கெங்குவார்பட்டி குடக்குடும்பன், 43. காரைக் குடும்பன், 44. மூங்கிலணை வன்னிக் குடும்பன், 45. பெரியகுளம் தாமரைக்குளம் ராமக் குடும்பன், 46. போடிநாயக்கனூரில் பொன்னழகக் குடும்பன், 47. திணைக்குளம் சங்க குடும்பன், 48. மஞ்சக் குடும்பன், 49. பூதுணத்தம் நாச்சி குடும்பன், 50. விரும குடும்பன், 51. ஆனைமலை குலகார பன்னாடி

52. மாரிச்சனாய்கம்பாளையம் குப்பையாண்டி பன்னாடி, 53. ஊத்துக்குழி ஆண்டிக் குடும்பன், 54. கோதைவாடி வேலுப் பன்னாடி,55. கோயமுத்தூர் வெள்ளாளனைப் பன்னாடி, 56. வீரப் பன்னாடி, 57.அவினாசிப் பன்னாடி, 58. சூலூரு தம்பியா வில்லாப் பன்னாடி, 59. உக்கிரங்கொடி வேலி மங்காப் பன்னாடி, 60. குறுப்பனாடு வில்லாப் பன்னாடி, 61. ஆவிழி சொக்கப் பன்னாடி, 62. அமுக்கயம் கத்தாங்கண்ணி ராக்கப் பன்னாடி 63. ஈரோடு கொங்குமுடையாப் பன்னாடி, 64. சேலம் முத்த பலகான், 65. ராசிபுரம் கன்ன பலகான், 66. நயினா பலகான், 67. பரமத்தி கன்ன பலகான், 68. வெங்கரை பாண்டமங்கலம் முத்தபலகான், 69.சின்ன தாராபுரம் முத்துக் கருப்ப குடும்பன், 70. பள்ளபட்டி வேல் குடும்பன், 71. அறவக்குறிச்சி ஆண்டி குடும்பன், 72. கருவூர் புலியூர் பெரிய மூப்பன், 73. பசவ மூப்பன், 74. வாங்கல் சின்னாறியா மூப்பன், 75. புகழியூர் சின்னக்காளி மூப்பன், 76. கட்டளை நடுவறுத்தா மூப்பன், 77. குளித்தலை பழனி மூப்பன், 78.தொட்டியம் உத்த மூப்பன், 79. வெள்ளூர் பரம மூப்பன், 80. சோமயநல்லூரு நயினகாளி மூப்பன், 81. திருச்சிராப்பள்ளி நாட்டு மூப்பன், 82. சொக்க மூப்பன், 83. துறையூர்ச் சீமை எளுவமூப்பன், 84. ஆண்டி மூப்பன், 85. பெரியா மூப்பன், 86. பழனி மூப்பன்

87. தஞ்சாவூர் சீர்மை துளசி பணிக்கன், 88. ஆண்டிபணிக்கன், 89. சனுவ குடும்பன், 90. மெய்ய குடும்பன், 91. தொண்டமனார் சீர்மை பழனிக் குடும்பன், 92. மெய்ய குடும்பன், 93. சரச குடும்பன், 94. குப்பா குடும்பன், 95. காரை குடும்பன், 96. சோடன் பிச்சை குடும்பன், 97. சின்னாண்டி காலாடி, 98. பழனி காலாடி, 99. லிங்கமநாய்க்கர் சீர்மை ராமக் குடும்பன், 100. ராமக் குடும்பன், 101. இலிங்கா குடும்பன், 102. மதுரையில் சொக்க குடும்பன், 103. வீர குடும்பன், 104. மாடக்குளம் வேதிகாபல் குடும்பன், 105. தண்டு காபல்க் குடும்பன், 106. கவுண்டன் கோட்டை புலையா குடும்பன், 107.உடையாத் தேவர் சீர்மை சேதுபதிக் குடும்பன், 108. ராமக் குடும்பன், 109. அழகக் குடும்பன், 110. கீலை பருத்தியூர் மேலை பருத்தியூர் உடையா குடும்பன், 111. வீர குடும்பன், 112. ராமநாதபுரம் ரெகுநாத குடும்பன், 113. ராம குடும்பன், 114. திருநெல்வேலியில் செம்புராய குடும்பன், 115. அழக குடும்பன், 116. கலங்காத கண்டம நாயக்கனூர் திருவிருத்தா குடும்பன், 117. அழகன் காலாடி, 118. சின்னாண்டி காலாடி, 119. வண்டியினார் சீர்மை சிவசூரிய குடும்பன், 120. அழக குடும்பன், 121. தும்பிச்சவங்கனூரில் சோனைக் குடும்பன் காணி காலாடி மற்றுமுண்டாகிய குடும்பனார்கள், பன்னாடிகள், காலாடிகள், மூப்பன், பலகானென்கிற அய்ந்து வகுப்பும் பன்னீராயிரம் கோத்திரமுடைத்தாராகிய தெய்வேந்திர வம்சத்தார் அனைவோர்களும்.

*80.* கரூர் மாவட்டம் நெரூரில் அக்கினீசுவரர் கோயில் கல்வெட்டு (வீரபாண்டிய தேவர் 17-ஆம் ஆட்சியாண்டு). (தென்னிந்திய கோயில் சாசனங்கள், பாகம் 2, எண் 715, பக்கம் 671) கொடையளித்த மள்ளர் குல கரைநாட்டு குஞ்சர மல்லான்

*81.* பனை ஒலைச் சுவடி. திருமண வாழ்த்துப்பாடல். கி.பி.

20.1.1850. (மள்ளர் மலர், ஜூன் 2002.) கோதமங்கலத்து அரசக் குடும்பன் மகன் சின்னப் பள்ளான் குடும்பன் திருமணத்தில் பாடியது. தாராபுரம் தாலுகா பொன்னிவாடியில் இருக்கும் சின்ன வீரக் குடும்பன் மகன் உடைச்சிக் குடும்பன் ஏடு.

**82.** தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம் இருவப்பபுரம் பெரும்படைச் சாத்தன் கோயில் கல்வெட்டு. (கி.பி. 1815). (-பழங்காசு. காலாண்டிதழ் (ஏப்ரல் 2003) 1/385, சீதக்காதி தெரு, காட்டூர்(தெற்கு), திருச்சி - 620 019). கோவில் பூசாரி கீதட்டாப் பாறை சுப்பக் குடும்பன் மகன் கரைஅடி ஊர் கோடாங்கி, சத்திரிய ஆழ்வார் இருளக் குடும்பன்.

**83.** மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் மேல உறப்பனூர் பெரிய கண்மாயின் பெரிய மடையின் இருதூண்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. (-திரு. இராசேந்திரன், மேல உறப்பனூர் பெரிய கண்மாய் மடைக்கல்வெட்டு, ஆவணம், இதழ் 13, சூலை2002, தமிழக தொல்லியல் கழகம், தஞ்சாவூர் - 613 005.) அரசன் மல்லர் குலத்தினராகக் குறிக்கப் பெறுதல். **ஸ்ரீவீரநாராயணன் கலிவர மல்லன்.**

**84.** திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் தாமரைப்பாக்கம் அக்னீசுவரர் கோயில் கல்வெட்டு. (-தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள், வெளியீடு எண் 141 பக்கம் 53-56, 1999, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை - 600 113.). குறிப்பிடப்படும் மள்ளர் குலத்தினர். **இலத்தூர் சேக்கிழான் அத்திமல்லன் சீராளன், பாடாநாட்டு கங்க(க)நல்லூர் மாதெட்டன் இருங்கோளன்**

**85.** மேற்படி கோயில். (-மேற்படி நூல் பக்கம் 12,) **மல்லன் நக்கன்**

**86.** மேற்படி கோயில். (-மேற்படி நூல் பக்கம் 31-32) **பங்கள நாடுடைய பிரிதியங்கரையன் மகன் அத்திமல்லனாகிய கன்நரதேவப் பிரிதியங்கரையன்**

**87.** ஈரோடு மாவட்டம் கொடிவேரி அணைக் கல்வெட்டு (1845). (மள்ளர் மலர், ஜூன், 1998.) **கொடிவேரி அணை கட்டிய ஒப்பந்தக்காரர் பழனிப் பன்னாடி.**

**88.** பழனி அருள்மிகு இடும்பன் திருக்கோயில் உள்ளிட்ட அருள்மிகு விக்னேஷ்வரர் வகையறா திருக்கோயில்களுக்கு பொன்னி மலைக் குடும்பனார் வகையறா பெற்ற பூமி கிரய பத்திரத்தில் உள்ள பொன்னிமலை குடும்பனார் வகையறாக்கள். -(பழனிதாலுகா, பழனி சப் டிஸ்டிரிக் பதிவு அலுவலகம் பத்திர எண் 880, ஆண்டு 1881). **1. பழையஆயக்குடி வெள்ளைராவுத்தர் மகன் காதர்சா ராவுத்தர் (மதம் மாறியவர்), 2. பொன்னிமலைக் குடும்பன், குழந்தைவேல் குடும்பன், 3. சிவனாகக் குடும்பன் மகன் கருப்பக் குடும்பன், 4. ஆண்டிக் குடும்பன் மகன் கருப்பக் குடும்பன், 5. ஆண்டிக் குடும்பன் மகன் பழனியாண்டிக் குடும்பன், 6. குளத்தாண்டி கருப்பக் குடும்பன் மகன் மயில் குடும்பன், 7. குழந்தைவேல் குடும்பன் மகன் வெங்கிடாசலக் குடும்பன்.**

**89.** தூத்துக்குடி மாவட்டம் புளியங்குளம் அமைந்திருக்கும் பாண்டியராசா கோயிலை (சிவன், நாராயணன், பஞ்ச பாண்டவர்கள் மற்றும் கௌரவர்கள் கோயில்) தமது கோட்டையில் கட்டிய நித்தன் குடும்பனார். (-கௌரவர்களுக்கு ஒரு கோயில் - த. வளவன்,தினமணி 21.3.2003).

**90.** குலோத்துங்க சோழ தேவர் I, காலம்-1112, பேரேரியை மராமத்து செய்வதற்காக நெல், நிலம் தானம் செய்தவர் பற்றிய கல்வெட்டு. கையெழுத்திட்டுள்ள அதிகாரி (தெ.க. 26/345). செல்வன் குஞ்சிரமல்லாந் மதுராந்தகப் பெருந்தச்சன்

**91.** திருமய்யம் தாலுகா சித்தூர் திருவாகீசுவரர் கோயிலுக்குத் தேவதானமாக நாட்டு நியமம் செய்கின்றவர்.(Ancient Inscriptions of Pudukottai State - No.26) பராந்தக குஞ்சிர மல்லனான இராசசிங்க பல்லவரையன்.

**தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தேவேந்திர குல வேளாளர் நாயக நாயகியர்**

**92.** பாண்டியன் பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி : இடைச் சங்க காலத்திலேயே முதுகுடுமி, மூத்த பழமையான குடும்பர் குலத்தை சேர்ந்தவன் என்று போற்றப்பட்ட பாண்டிய வேந்தர். வேள்விக் குடிச் செப்பேட்டிலும் குறிப்பிடப்படும் குடும்பன் புறநானூற்றுப் பாடல்களில் தகைமாண் குடுமி, விறன்மாண் குடுமி, குடுமிக் கோமான் என்றெல்லால் சிறப்பிக்கப்படும் பாண்டியர் ஆவர்.

தண்டாவீகைத் தகைமாண் குடுமி (புறம் 6-26)
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி (புறம் 12-3)
குடுமிக் கோமாற் கண்டு (புறம் 64-6)

**93.** சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி (சோழன் உருவப்பஃறேர் இளஞ்செட்சென்னி) : சோழ வம்சத்தினர் மள்ளர் குலத்தினராகப் பல பாடல்களில் குறிப்பிடப் படுகின்றனர். புறநானூறு பாடல் எண் 10இல் ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் அவனை மள்ளர் குலத்தினன் என்கிறார்.

மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப (புறம் 10-9-10)

**94.** பாண்டியன் தலையாலங்காணத்துக் செருவென்ற நெடுஞ்செழியன் : புறநானூறு-77,78,79, அகநானூறு 36. இவன் சுற்றத்தார், தந்தை-பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, மனைவி-கோப்பெருந்தேவி.

**95.** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், (பதிற்றுப்பத்து 13) : சுற்றத்தார்-தந்தை உதியங்சேரலாதன்: தாய் வெளியன்வேண்மாள் நல்லினி: மனைவியர்-வேளாவிக் கோமான் பதுமன் தேவி, சோழன் மணக்கிள்ளி, தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன், மக்கள்-களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச்

சேரலாதன், சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள். இம்மன்னனைப் பற்றிய பிற பாடல்கள் - புறநானூறு 62, 63, 368, அகநானூறு 127, 347, 396, பதிற்றுப்பத்து 3,4,5, 6-ம் பதிகம்: இரண்டாம் பத்து, சிலப்பதிகாரம் 23-24.

**96.** யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை : புறநானூறு-77,78, 79, அகநானூறு 36. இவன் சுற்றத்தார்-தந்தை பல்யானைச் செல்கெழு குட்டுவன், மள்ளர் குலத்து நண்பர்கள் - செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள, பொருநன்.

வம்ப மள்ளர் (புறம் 77-9)

புனை கழல் எழுவர் நல்வலம் அடங்க (புறம் 76-12)

கொய்சுவல் புரவிக் கொடித் தேர் செழியன்
ஆலங்கானத்து அகன் தலை சிவப்ப
சேரன் செம்பியன் சினம் கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம் பூண் எழினி
நார் அறி நறவின் எருமையூரன்
தேம் கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல் தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல் வலம் அடங்க ஒருபகம் (அகநானூறு 36-13-20)

**97.** களங்காய்க்கண்ணி நாட்முடிச் சேர மள்ளர் : பதிற்றுப்பத்து 38. சுற்றத்தார்-தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் வேளாவிக் கோமான் பதுமன் தேவி, சகோதரர்-செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இளங்கோவடிகள்.

**98.** செம்பியன்-சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் : புறநானூறு 77,78,79, அகநானூறு 36. இவன் சுற்றத்தார்-தந்தை கரிகால் சோழன், மனைவி கீர்த்தி, மக்கள்-உதயகுமரன், தொண்டைமான் இளந்திரையன், சகோதரர்-நலங்கிளிள, மாவளத்தான், சகோதரி-ஆதிமந்தி,மைந்துனர் சேரன் செங்குட்டுவன், ஆட்டனத்தி.

**99.** கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் : பதிற்றுப்பத்து 43. தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாத மள்ளர், தாய் சோழன் மணக்கிள்ளி மள்ளத்தியார், சகோதரர்-இளங்கோவடிகள், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேர மள்ளர், ஆடுகோட்பாட்டுச் சேரலாத மள்ளர், மனைவி மையூர்கிழான் வேண்மான் அந்துவன் செள்ளை மள்ளத்தியார், மகன்-குட்டுவன் சேர மள்ளர்.

வென்றி-மேவல், உரு கெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல் களிறு பெருக
மன்றம் படர்ந்து மறுகு சிறைப் புக்கு (பதிற்றுப்பத்து 43.24-26)

**100.** செல்வக் கடுங்கோ வாழியாத மள்ளர் : பதிற்றுப்பத்து 63. தந்தை அந்துவன் சேரல் இரும்பொறை மள்ளர், தாய் பொறையன் பெருந்தேவி மள்ளத்தியார், மனைவி வேளாவிக் கோமான் பதுமன்தேவி மள்ளத்தியார், மகன் தகடூரெறிந்த பெருஞ்சேரல்

இரும்பொறை மள்ளர். இம்மன்னனைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் பதிற்றுப்பத்து 7-ஆம் பத்து, புறநானூறு 8, 14, 387.

ஆடு பெற்று அழிந்த மள்ளர் மாறி
நீ கண்டனையேம் என்றனர், நீயும்
நும் நுகம் கொண்டு இனும் வென்றோய் அதனால்
செல்வக் கோவே சேரலர் மருக (பதிற்றுப்பத்து 63. 13-16)-

**101.** குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை மள்ளர் : பதிற்றுப்பத்து 81,90. சுற்றத்தார்-தந்தை குட்டுவன் இரும்பொறை (செங்குட்டுவன்), தாய் மையூர்க்கிழான் வேண்மாள் அத்துவஞ்செள்ளை, தாத்தா மையூர் அமைச்சியன் மையூர்க்கிழான். உறவினர் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேர மள்ளர்.

தூ எதிர்ந்து பெறாஅத்தா இல் மள்ளரொடு
தொல் மருங்கு அறுத்தல் அஞ்சி அரண் கொண்டு (பதிற்றுப்பத்து 34-35)

வெம்போர் மள்ளர் தெண் கிணை கறங்க
கூழுடை நல் இல் ஏறு மாறு சிலைப்ப (பதிற்றுப்பத்து 90. 44-45)-

**102.** இருங்கோவேள், எருமையூரன் (எருமை வெளியன்), திதியன், எழினி, பொருநன் : (புறநானூறு 77,78,79, அகநானூறு 36). மள்ளர் குலத்தினர் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

**103.** சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி : புறநானூறு 80,81,82. பகைவன் முக்காவல் நாட்டு ஆமூர் மள்ளன்.

களம் புகு மல்லற் கடந்து அடுநிலையே -(புறநானூறு 80.9)
செறியத் தொகுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைபட்டோரோ -(புறநானூறு 81.5)
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு -(புறநானூறு 82.5)

**104.** முக்காவல் நாட்டு மள்ளன் தித்தன் : உறந்தை அரசன். புறநானூறு 80. மகள் ஐயை.

மைந்துடை மல்லன் மதவலி முருக்கி -(புறநானூறு 80.2)

**105.** கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தான் : (சோழன் பெருங்கிள்ளி, பொத்தியாண்ட பெருஞ்சோழன்). புறநானூறு 219.

உள் ஆற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழுஉ வள்ளூரம் உணக்கும் மள்ள -(புறநானூறு 219. 1-2)

**106.** சிறுகுடிகிழான் பண்ணன் : (புறநானூறு 388). இவனைப் பற்றிய மற்ற பாடல்கள் புறநானூறு 70, 173, அகநானூறு 34, 177.

அண்ணல் யானை வழுதி
கண் மாறிலியர் என் பெருங் கிளைப் புரவே -(புறநானூறு 388.15-16)

**107.** பாண்டியன் வழுதி : (புறநானூறு 388). குடும்பர் குல மன்னன்.

**108.** ஊனூர் மன்னன் தழும்பன். (அகநானூறு 227).

களம் கொள் மள்ளரின் முழங்கும் அத்தம் -(அகநானூறு 227.11)

109. தாமான் தோன்றிக்கோ : (புறநானூறு 399). மள்ளர் குல மன்னர்.

110. சேரன் ஆட்டனத்தி : குறுந்தொகை 31. மனைவி ஆதிமந்தி, மாமனார் கரிகாற்சோழன். இவனைப் பற்றிய மற்ற பாடல்கள் அகநானூறு 222, 236, 376, 396. சிலப்பதிகாரம் 21.

மள்ளர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கையானும் -(குறுந்தொகை 31.1-2)

111. தகடூர் மன்னன் அதியமான், சேர மன்னர்களின் தாயாதி (பங்காளி) மள்ளர் குலத்தினர் : தகடூர் யாத்திரை 35, 44.

ஆகோள் மள்ளரு மளவாக் கானத்து -(தகடூர் யாத்திரை 13)
மல்லன் மூதூர்ப் பல்சான்றீரே -(தகடூர் யாத்திரை 27)
தெய்வ மல்லன் மகனே நொய் தாங்கு -(தகடூர் யாத்திரை 35)

112. சோழன் நேரிவெற்பன் : திருவிளையாடற் புராணம் தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம் 13, 14, 19. மள்ளர் குல மன்னர்.

மலைசிறந்த நேரிவேற்பன் மள்ளர் சேனை வெள்ளமேற் -(பாடல் 13)
இருவர்சேனை மள்ளரும் மெதிர்ந்துகை கலந்தனர் -(பாடல் 14)
மடுக்கும்வாளி மார்புதைப்ப வாங்கிமற்றவ் வாளிகொண்
டடுக்குமேவ லாரையெய் தடர்ப்பர் கிள்ளி மள்ளரே -(பாடல் 19)

113. பாண்டியன் இராசராசன் : பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்-பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த படலம் 47. மள்ளர் குல மன்னர்.

அறனல வென்றவ னாள் வினை மள்ளர்க்கு
இறைமக னான சருச்சர னென்றோர் -(பாடல் 47)

114. உறையூர் வேந்தன் செங்கணான் : (முக்கீச்சரத்தடிகள்). சம்பந்தர் தேவாரம்-திருமுக்கீச்சரம் (2-ஆம் திருமுறை). மள்ளர் குல மன்னர்.

மல்லையார் மும்முடி மன்னர் முக்கீச்சரத்தடிகளைச்
செல்வராக நினையும் படி சேர்த்தியச் செந்தமிழ்-
(சம்பந்தர் தேவாரம் செய்யுள் 11, திருமுக்கீச்சரம்).
நல்லார்கள் அந்தணர்கள் நாளுமேத்துந் திருநல்லூர்
மல்லார்ந்த கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே
-(சம்பந்த தேவாரம், திருநல்லூர் - பாடல் 10)

115. முதல் பல்லவ மன்னன் இளந்திரையன் : பெரும்பாணாற்றுப்படை. தந்தை கிள்ளிவளவன், இவனைப் பற்றிய பிற பாடல்கள் அகநானூறு 85, 340. மணிமேகலை 24, புறநானூறு 95. மள்ளர் குல மன்னர்.

கொண்டியுண்டித் தொண்டையோர் மருக
மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந -(பெரும்பாணாற்றுப்படை வரி 454-456)

116. திருமால் : பரிபாடல் மூன்றாம் பாடல் வரி 41, வரிகள் 89-90. கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம்-பள்ளுப்படலம் 28, காவலன்

வழிபடுபடலம் 15. மள்ளர் குல இறைவன்.

ஆயிரம் விரித்த கைம்மாய மள்ள -(பரிபாடல் 3.41)
பருதி வலவ பொருதிறன் மல்ல
திருவின் கணவ பெருவிறன் மள்ள -(பரிபாடல் 3.8-9)

இந்திரன் பிரம னாரனன் முதலா
மிமையவர் நுகம் அலம் மேழி
வெந்திறர் கொழு வார் கயிறு கோல் பகடு
வித்து நாறு அனைத்துமா யங்கு
வந்தனர் பயில வன்களை நாதர் ஏவல்
செய் மள்ளராய் விரவி
முந்துறும் பட்டிப் பள்ளனை யடுத்து
மொழிவழி வினை தொடங்கினரால்

-(பேரூர்ப்புராணம்-பள்ளுப்படலம் செய்யுள் 28.)

**117.** முருகன் : திருமுருகாற்றுப்படை வரி 262, 269. கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம்-பள்ளுப்படலம் 27. வையாபுரிப் பள்ளு 7, 21. மள்ளர் குல இறைவன்.

செருவில் ஒருவ பொருவிறல் மள்ள -(திருமுருகாற்றுப்படை வரி 262)
தடமுலைச் சுவைப்பால் பருகிய மணிவேற் சாமியும் பள்ள நற்சிறாராய்
-(பேரூர்ப்புராணம், பள்ளுப்படலம், செய்யுள் 27)

நீர்க்குடும்பன் கோட்டு மதி நிகர்பன்றிக் கோட்டிணைக்கு
மோர்க்குடும்பன் கனகசபை யெம்பிரானுந்தருவோன்
பார்க்குடும்ப னார் கிருபை பங்கயஞ்செய் யுங்குமரன்
பேர்க்குடும்பன் தன்னுடைய பிரதாபஞ் சொல்லுவனே
- (வையாபுரிப்பள்ளு செய்யுள் 7)

**118.** சிவபெருமான் : கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம் பள்ளுப் படலம் 25, 29, 34, 35, 36, 39, 41, 69. தென்கையிலாயப் படலம் 60. சுமதி கதிபெருபடலம் 6. இந்திரன் சாபந்தீர்த்த படலம் 20. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் திருமணப்படலம் 26. சோழனை மடுவில் வீட்டிய படலம் 18. விறகு விற்ற படலமம 26. தியாகராச லீலை திருநாட்டுப்படலம் 107. சம்பந்தர் தேவாரம் திருநல்லூர் 10 (2-ஆம் திருமுறை) வையாபுரிப்பள்ளு 7, 25. சங்கர நாராயண சுவாமி கோயிற்புராணம்-பாயிரம் 4. மள்ளர் குல இறைவன்.

அராவணி சடிலப் பள்ளனார் தோழரடுக்வந்தமை யறியார் போற்
பராமுகத்தினராய்ப் பள்ளிகள் பள்ளர் தம்மொடும் பயின்றிருந் தொழிலின்
-(பேரூர்புராணம், பள்ளுப்படலம், பாடல் 34)

கார்கொண்ட புன்னை வனங்காமுற்று
வாழ் கடணைக் கடலை மல்லற்
சீர்கொண்ட சீராசைத் திருநகர்வாழ்
சிவக்கொழுந்தைச் சிந்தை செய்வோம்.

-(சங்கர நாராயண சாமி கோயிற் புராணம். பாயிரம். கடவுள் வணக்கம், சங்கரலிங்கம், பா.4)

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் சிவன் மள்ளரை கண்ணகன் குடுமி, குடம்பயில் குடுமி, பொன்புனைகுடுமி, களிற்றின் பிடிசுமந்த குடுமி, திங்கள் சூழ் குடுமி எனக் குறிப்பிடுகிறது.

**119.** பார்வதி-உமாதேவி-தடாதகைப்பிராட்டியார் : கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம் 26, 30, 34, 29 திருவிளையாடற் புராணம். மள்ளர் குல இறைவி.

பட்டிநாயகர் தம் மிடம்பிரியாத
பச்சைநாயகி பள்ளியாகி -(பேரூர்ப்புராணம், பள்ளுப்படலம் பாடல் 26)

திருமகள் வாணி சசிமுதலான
தேவியர் பள்ளியராகி
இருகையிலிணிந்த குருகினந் தெளிப்ப
விட்டிடை வருந்தவார் செவிகள்
மருவிய தோடு நாலவார் கூந்தன்
மல்கிய தோளின் வீழ்ந்தலைய
உருகெரு பச்சைப் பள்ளியோடு
அயர்ந்திட் டொண்முடி நாறு நட்டனரால்
-(பேரூர்ப்புராணம், பள்ளுப்படலம், பா.30)

**120.** விநாயகன் : கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம் 27. மள்ளர் குல இறைவன்.

கடலிடைத் துளபக் கமடமுன் பிடித்த
கயமுகக் கடவுளு மினின்
தடமுலைச் சுவைப்பால் பருகிய
மணிவேற் சாமியும் பள்ளநாற்சிறாராய் -மேலது, பாடல் 27

**121.** பிரமன் மற்றும் சிவகணநாதர்கள், தேவர்கள் : கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம் 28, 29, இந்திரன் சாபந்தீர்த்த படலம், (பார்க்க திருமால் பகுதிப் பாடல்.) 20. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் நரி பரியாக்கிய படலம் 59. தேவேந்திர மள்ளர் குலத்தினர்.

**122.** இலக்குமி, சர.ஸ்வதி, இந்திராணி மற்றும் தேவ மகளிர், கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம்-பள்ளுப்படலம் 30, 34 : (பார்க்க பார்வதி பகுதிப் பாடல்) தேவேந்திர மள்ளர் குல இறைவியர்.

**123.** இந்திரன் : கச்சியப்ப முனிவரின் பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம் 28, 29, இந்திரன் சாபந்தீர்த்த படலம் 20. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் இந்திரன் பழி தீர்த்த படலம் 37, 41.

வெறுத்தமால் யானைமள்ளர்
வேலையுக் கொழுந்து குன்றம்
அறுத்தவானவர் கோன் அந்த
அவுணர்கோ மகனைச் சூழ்ந்தாண்

-(திருவிளையாடற்புராணம் - இந்திரன் பழி தீர்த்தபடலம் ப.11)

இந்தத் தொகுப்பு முற்றுப் பெறவில்லை. மேற்கோள் காட்டப்பட்ட நூல்களும் முழுவதுமாக எடுத்துக் காட்டப்படவில்லை. இன்னும் பல நூல்களிலும், மேலே சொல்லப்பட்டவர்களும் மற்றவர்களும் மள்ளர் இனத்தினராகச் சொல்லப் பட்டிருக்கின்றனர்.

'கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள், கோயம்புத்தூர் மாவட்டம்' எனும் தலைப்பில் முனைவர் மா.கணேசன், திரு.இரா.ஜெகதீசன் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு மகாகவி பாரதியார் நூலகம், எண் 7, ஆர்.கே.நகர், நவாவூர் பிரிவு, பாரதியார் பல்கலைக் கழகம் (அஞ்சல்) கோயமுத்தூர்-641 046. நூலில் புதிதாகக் கொடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள்.

**124.** தென்குடும்பரில் ஆரியன் உலகுய்ய வந்தானான வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையன் : உடுமலைப் பேட்டை வட்டம் கடத்தூர் கொங்கவிடங்கேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவரில் உள்ள வீரராஜேந்திர மள்ளரின் (கி.பி.1233) கல்வெட்டில் வீரராசேந்திர தேவரின் கிரகதோசம் நீங்க, கரைவழிநாட்டு ஏழுர் தென்குடும்பரில் ஆரியன் உலகுய்ய வந்தானான வீர ராசேந்திர அணுத்திரப் பல்லவரையன் கண்ணாடிப்புத்தூரில் உள்ள தன் நிலத்தைக் கோயிலுக்கு அளித்து அதன் வருமானத்தில் ஐப்பசி மாதத்தில் சிறப்பு பூசைகள் நடக்க ஏற்பாடு செய்தது கூறப்பட்டுள்ளது. (நூலில் கல்வெட்டு எண் 193)

குடும்பர் குலத்தவரான இந்த வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையர் கொங்குநாட்டு அரசில் பெரும் அதிகாரியாகவும், நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்பவராகவும் இருக்க வேண்டும். இவருக்கு ஆரியன் என்ற பட்டமும் உலகுய்ய வந்தான் என்ற பட்டமும் இருந்துள்ளது. இவர் தென்குடும்பர் எனக் கூறப்படுகிறார். தென்குடும்பர் என்பது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோனாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம். கோனாடும் கொடும்பாளூரும் இருங்கோளர்களின் ஆட்சிப் பகுதியாகும்.

**125.** தென்குடும்பர் யாழ்வல்லான் பாண்டியனான வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையன் : உடுமலைப் பேட்டை வட்டம் கடத்தூர் கொங்கவிடங்கீசுவரன் கோயில் கருவறை வடக்குச் சுவற்றில் உள்ள வீரராஜேந்திர மள்ளர் ஆட்சியாண்டு 19, கி.பி.1226 காலத்திய கல்வெட்டு கரைவழி நாட்டு ஏழுர் தென்குடும்பர் குலத்தினன், உலகுய்யவந்தான், ஆரியன் என முந்திய கல்வெட்டில் கூறப்படும் வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையன் இக்கல்வெட்டில் கீரனூர் முதலி என்றும் யாழ்வல்லான் என்றும் பாண்டியன் என்றும் கூறப்படுகின்றான். இரண்டு கல்வெட்டுக்கும் உள்ள கால இடைவெளி ஏழாண்டுகள் ஆகும். இந்தக் கீரனூர் முதலிகளில் யாழ்வல்லான் பாண்டியனான வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையனும், குடும்பர்

குலத்தினரான கிரனூர் முதலிகளில் அட்டாலைச் சேவகன் வாழ்வித்தானான வீரராசேந்திர இருங்கோளனும் (தெ.க.தொகுதி 5, எண் 276. இருங்கோளர் குடும்பர் குலத்தினர்) கடத்தூரில் உள்ள தங்களின் ஊராண்மைக் காணிக்குப் பக்கத்தில் ஒரு நிலத்தை கிரனூர் திருகாமக்கோட்ட நாச்சியாருக்கு அமுதுபடிப் புறமாக விட்டனர். (நூலில் கல்வெட்டு எண் 189).

**126.** கரைவழி நாட்டுக் கொழுமத்திலே சுந்தரகுண அணுத்திரப் பல்லவரையன் கணபதி : கோயமுத்தூர் வட்டம் பேரூர் திருவான்பட்டிப் பெருமாள் (பட்டீசுர மள்ளர்) கோயில் அர்த்த மண்டபம் தெற்குப் பட்டியில் உள்ள மள்ளர் கோனேரின்மை கொண்டான் காலத்திய கல்வெட்டு கரைவழிநாட்டுக் கடத்தூரில் படைத் தலைமை யேற்று நடத்திய கரைவழிநாட்டு கொழுமத்து சுந்தர குண அணுத்திரப் பல்லவரையன் கணபதி பற்றிய குறிப்பு உள்ளது. கல்வெட்டின் பிற்பகுதி கிடைக்கவில்லை. இவர் தென்குடும்பர் குலத்தவர் என்பதும் படை நடத்தியவர் என்பதும் மற்ற கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. அணுத்திரன் என்பது தேவேந்திரன் என்று பொருள்படும். (நூலில் கல்வெட்டு எண் 288). இராஜராஜபுரம் என்பது ஈரோடு மாவட்டத்தில் உள்ள தாராபுரத்தைக் குறிக்கும். இங்கு இதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குல வேளாளர் மிக அதிகமாக இன்றும் வசிக்கின்றனர்.

**127.** கண்டர வீமநல்லூர் அணுத்திரப் பல்லவரையன் : கோயமுத்தூர் மாவட்டம் பல்லடம் வட்டம் இருகூர் சிவாலயம் இராமசாமி குருக்கள் மகன் திரு. நாகேசுவரசிவம் வசம் உள்ள செப்பேடு மள்ளர் கோனேரின்மை கொண்டான் (இராசராசன்-வீரகேரளன்) காலத்தியது. பஞ்ச நெறிவாணனான இராசராசபட்டனுக்குக் கொடுத்த ஓலை. போரில் இவன் செய்த பணிக்காக கொடுக்கப்பட்ட உரிமைகள். பொங்கலூர்காநாட்டு ஆளுகை தோழன் கண்டர வீமநல்லூர் அணுத்திரப் பல்லவரையன் உத்தமசோழரின் தந்தை போரில் இறந்தார். இராசராசபட்டன் என்ன பணி செய்தான் என்று தெரியவில்லை. அவனுக்கும் அவன் வாரிசுகளுக்கும் கொடுக்கப்பட்ட உரிமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இதில் குடும்பரான வீமநல்லூர் அணுத்திரப் பல்லவரையர் உத்தம சோழன் குறிப்பிடப்படுகிறார். கோட்டைத் தலைவராக இவரின் தந்தை-பாட்டனார் இருந்துள்ளது தெரிகிறது. (நூலில் செப்பேடு எண் 369).

**128.** நூலில் கல்வெட்டு எண் 8: பொங்கலூர்கா நாட்டு கானூர் முதலிகளில் வீரராசேந்திர இருங்கோளர், வீரராசேந்திர இருங்கோளர் மனைக்கிழத்தி சடைமேலிருந்தாள் : கோயமுத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டம் அவிநாசியில் அம்மன் கோயில் வடக்குச் சுவர் குமுதவரியில் உள்ள கல்வெட்டு வீரராசேந்திரன் மள்ளர், ஆட்சியாண்டு 16, கி.பி.1223-24. குடும்பன், குடுமிச்சியான (தென்னிந்திய கல்வெட்டுகள்

தொகுதி 5, எண் 276) கானூர் முதலிகளில் வீரராசேந்திர இருங்கோளரும் அவரது மனைவி சடைமேலிருந்தாளும் பெருங்கருணாலயச் செல்விக்கு அமுதுபடிப்புறமாக கொழுஞ்சிப்பாடியான உடையபிராட்டிச் சதுர்வேதிமங்கலத்தில் ஒரு மா நன்செய் நிலம் தானம் செய்து கல்வெட்டிக் கொடுத்தது பற்றிய செய்தி. நூல் கல்வெட்டு 189 இல் குறிப்பிடப்படும் வீரராசேந்திர இருங்கோளரும் இவரே. (பார்க்க: இடைக்கால மள்ளர், குடும்பர் குல இருங்கோவேள் வம்சத்தினர், மள்ளர் மலர், திங்களிதழ், ஜூலை 2000 பக் 4-10)

**129.** நூலில் கல்வெட்டு எண் 165: **கடத்தூரான இராசராசநல்லூர் கொடிக் காரைத்தொழு சோழன் வீரசோழ இருங்கோளன் :** உடுமலைப்பேட்டை வட்டம் கடத்தூர் திருமருதுடையார் கோயில் மகாமண்டப வடக்குச் சுவரிலுள்ள மள்ளர் வீரராசேந்திர தேவர். ஆட்சியாண்டு 10, கி.பி. 1217 காலத்திய கல்வெட்டு. கரைவழிநாட்டு கொடிக்காரைத்தொழு குடும்பர் குலத்தினன், ஊராளி பெருமாள் பெருமாளான வீரசோழ இருங்கோளன் திருமருதுடையாற்கும் திருமாளிகைப் பிள்ளையார்க்கும் நெய்வேத்திய அமுதுபடிக்கும் மற்ற காரியத்துக்கும் நிலம் தானம் கொடுத்தான்.

**130.** நூலில் கல்வெட்டு எண் 188: **கரைவழி நாட்டு கொடிக் காரைதொழு முதலிகளில் சோழன் கூத்தனான வீரராசேந்திர இருங்கோளன் :** உடுமலைப் பேட்டை வட்டம் கடத்தூர் கொங்கவிடங்கிசுவரன் கோயில் கருவறை மேற்குச் சுவரிலுள்ள மள்ளர் வீரராசேந்திர தேவர், ஆட்சியாண்டு 17, கி.பி.1224 காலத்திய கல்வெட்டு. குடும்பர் குல கரைவழிநாட்டு கொடிக் காரைத்தொழுவு முதலிகளில் சோழன் கூத்தனான வீரராசேந்திர இருங்கோளன் அஞ்சாதகண்டப் பிரமாராயன் எழுந்தருளிவித்த சுப்பிரமணியப் பிள்ளையாருக்கு கொடையாக அளித்த நிலம் பற்றிக் கூறுகிறது. கரைவழி நாட்டிலும் பொங்கலூர்கால் நாட்டிலும் குடும்பர் குல முதலிகள் இருங்கோளர், அனுத்திரப்பல்லவரையர் என்ற பட்டப் பெயர்களில் பலர் அரசு அதிகாரிகளாக இருந்ததுள்ளனர்.

**131.** நூலில் கல்வெட்டு எண் 197: **கரைவழிநாட்டுக் கடற்றூர் மன்றாடி காவன் சோரகனான வீரசோழ இருங்கோளன் :** உடுமலைப்பேட்டை வட்டம் கடத்தூர் கொங்கவிடங்கிசுவரர் கோயில் கருவறை தென் சுவரிலுள்ள மள்ளர் வீரராசேந்திர தேவர். ஆட்சியாண்டு 14, கி.பி.1221 காலத்திய கல்வெட்டு. தென்குடும்பரான கரைவழிநாட்டுக் கடத்தூர் மன்றாடி காவன் சோரகனான வீரசோழ இருங்கோளர் கொங்கவிடங்கிசுவரமுடையார்க்கு மகுடம் செய்து சாத்தியது பற்றிய கல்வெட்டு.

**132.** நூலில் கல்வெட்டு எண் 116: **அரசி மல்லி கேசி :** கோயமுத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டம் அன்னூர் மன்னீசுவரர் கோயிலின் தெற்குச் சுவரில் உள்ள மள்ளர் வீரராசேந்திர தேவர்,

ஆட்சியாண்டு 13 காலத்தியது. மல்லி கேசி சந்தியாதீபம் வைத்தது பற்றிக் கூறுகிறது. கோக்கிழானடிகள் என்பது வீரராசேந்திரரின் தந்தையைக் குறிக்கும். கோக்கிழானடிகளின் மனைவியரில் மல்லி கேசி என்பவர் மன்னீசுவரர் கோயிலில் சந்தியாதீபம் வைக்க ஒன்னேகால் கழஞ்சு பொன் அளித்தது பற்றிக் கூறுகிறது.

**133.** நூலில் கல்வெட்டு எண் 152: வலரி பூமன்நம்பி மணவாட்டி சோழன் உமை : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம் நடுவச்சேரி கோதை பிராட்டீச்சுரம் கோயிலின் மகாமண்டப கிழக்கு வடக்குச் சுவரில் உள்ள இராசகேசரி குலோத்துங்க சோழன் மள்ளர், ஆட்சியாண்டு 15 காலத்தியது. வலரி என்பது தேவேந்திரரின் பெயர்களில் ஒன்றாகும். வலாரி, குடுமி, குடும்பன், குடுபர், குடுமர், குடுமிச்சி என்பதும் மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர்களின் குலப் பிரிவுகளாகும். விக்கிரம சோழனின் ஏழாவது ஆட்சியாண்டில் செலக்கிரிச்சலில் உள்ள கல்வெட்டு பொங்கலூர்கால் நாட்டு கீரனூரில் இருக்கும் ஐங்கைக் குடுமிச்சிகளில் சோழன் உமையான அணுத்திரப் பல்லவரைசி தன்மம் பற்றிக் கூறும். கீரனூர்ச் சோழன் உமையும் இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் வலரி பூமன்நம்பி மணவாட்டி சோழன் உமையும் வேறு வேறாகவும் உறவினராகவும் இருக்கலாம். ஒருவராகக் கூட இருக்கலாம். கோதைப் பிராட்டீசுவர முடையாருக்கு சந்திவிளக்கெரிக்க பொற்காசுகளைக் கொடையாக அளித்தூர் சோழன் உமை.

**134.** நூலில் கல்வெட்டு எண் 102: பெருமாள் முதலிகளில் வல்லங்கிழான் மல்லன் அழகிய சிற்றம்பலமுடையானான முனையதரன் : கோயமுத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டம் அன்னூர் மன்னீசுவரர் கோயிலின் தெற்குச் சுவரில் உள்ள கல்வெட்டு பரகேசரி விக்கிரம சோழன் மள்ளர், ஆட்சியாண்டு 8 காலத்தியது. மல்லர் குலத்தினர் அரசு அதிகாரியாக, பெருமாள் முதலிகளாக இருந்து வந்துள்ளது இக்கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. இவர் மள்ளர் குலத்தினர் என்பது இவரது பெயரிலேயே கல்வெட்டில் உள்ளது. இந்த முனையதரன் மல்லர் மன்னீசுவரர் கோயிலில் நடைபெறும் உவா (பௌர்ணமி அல்லது அமாவாசை) சிறப்பு வழிபாட்டிற்கு வேண்டிய அரிசி, காய்கறிகளுக்காக இக்கோயில் பண்டாரத்தில் பழஞ்சலாகை அச்சு (ஒரு வகைக் காசு) செலுத்தியுள்ளார்.

**135.** நூலில் கல்வெட்டு எண் 162: கோனாட்டான் வீரசோழன் : கோயமுத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டம் ஆலத்தூர் வீரசங்காதப் பெரும்பள்ளி அணியாதழகியார் கோயில் யாளிக் கல்லில் உள்ள வட்டடெழுத்துக் கல்வெட்டு கோனாட்டான் வீரசோழன் மள்ளர், ஆட்சியாண்டு 37, கி.பி. 979-980 காலத்தியது. கொங்குச் சோழர்கள் கோனாட்டார் என அழைக்கப்படுவது இக்கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. புதுக்கோட்டை மாவட்ட கோனாடு இருங்கோளர்களின்

TAMIL NADU STATE DEPARTMENT ... LIBRARY, Acc No. ... Date ...

ஆட்சிக்குட்பட்ட பகுதி ஆகும். இந்த இருங்கோளர்கள் கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகளில் தென்குடும்பர் குலத்தவர் எனக் குறிப்பிடப்படுகிறார்கள். ஆக கொங்குச் சோழர்கள் குடும்பர், மள்ளர் எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தவர் என்பது பெறப்படும். **முதலாம் ஆதித்தனுடைய மகன் முதற் பராந்தகன்** கி.பி.907-இல் ஆட்சிக்கு வந்து பிறகு கொங்குநாட்டைக் கைப்பற்றியபோது கோனாட்டு அரசர்களான **இருங்குவேளிர்களில்** ஒரு பிரிவினரை சுயாட்சி பெற்ற கொங்கச் சிற்றரசர்களாக நியமித்தான் என கே.வி. சுப்பிரமணிய அய்யர் (Historical Sketches of Ancient Dekhan தொகுதி II, பக்கம் 67) கூறுவார். இருக்குவேளிர், இருங்கோவேளிர் இருங்கோளர் எனப்படும் கொடும்பாளூர் அரசர்கள் குடும்பர் குலத்தினர் (தெ.க.தொகுதி 5,எண் 278). **தென்குடும்பரான கோனாட்டான் வீரசோழன்** ஆலத்தூர் வீரசங்காதப் பெரும்பள்ளியில் அருக தேவருக்கு அளித்த நிலக்கொடை பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது.

**136.** நூலில் கல்வெட்டு எண் *169*: **கரைவழிநாட்டு ஊராளி தென்குடும்பரில் சிங்கன் சோழனான இராஜராஜதேவன் :** கோயமுத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் கடத்தூர் திருமருதுடையார் கோயிலில் உள்ள கல்வெட்டு திரிபுவனச் சக்ரவத்திகள் மள்ளர் ஸ்ரீவீரநாராயண தேவர்., ஆட்சியாண்டு 7 ஆம் காலத்தியது. இக்கல்வெட்டில் **கரைவழிநாட்டு ஊராளி தென்குடும்பரில் சிங்கன் சோழனான இராஜராஜதேவன்** நிலம் தானமாகக் கொடுத்தது பற்றிக் கூறப்படுகிறது. இது செங்கழுநீர் ஓடை வெட்டவும் அமுதுபடிக்கும் விஞ்சனத்திற்கும் கொடுக்கப்பட்டது ஆகும்.

**137.** நூலில் கல்வெட்டு எண் *10*: **தேவேந்திரப்பிச்சன் :** கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம் அவிநாசியில் அம்மன் கோயில் மகாமண்டபத் தென்சுவர் கொடுங்கையின் கீழ் உள்ள கல்வெட்டு சுந்தர பாண்டிய மள்ளர் காலத்தியது. சோழ மண்டலத்து ராஜராஜ வளநாட்டுப் பெரும்புலியூருடையான் முதலைவாய்ப் பிள்ளைக்குக் குடுத்த வேளானுக்கு நிலமும் பணமும் சில உரிமைகளும் வழங்கி ஆணை ஓலை கொடுத்து கல்வெட்டுவித்தது. இந்த ஆணையில் கையெழுத்திட்டுள்ளவர்களில் **தேவேந்திரப் பிச்சன்** என்ற தேவேந்திர வம்சத்தவரும் ஒருவர். அரசில் அல்லது கோயிலில் அதிகாரியாக தேவேந்திரப் பிச்சன் இருந்துள்ளது தெரிகிறது.

**138.** நூலில் கல்வெட்டு எண் *23*: **தேவேந்திரப்பன் :** கோயமுத்தூர் மாவட்டம் அவிநாசி கருணாம்பிகை கோயில் மகாமண்டப வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு கி.பி. 1289 காலத்தியது. அவிநாசி ஆளுடைய நாயனார் கோயிலில் சிறுகாலைச் சந்திக்குப்பின் குண்டூர்நாயன் ஏற்படுத்திய இடைச் சந்தியில் அமுதுபடிக்கு நெல் வழங்கி அச்சோற்றை மஹேஸ்வரர்கட்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையில் மற்றவர்களுடன் **தேவேந்திரப்பன்** அவர்களும் கையெழுத்திட்டுள்ளார்.

**139.** நூலில் கல்வெட்டு எண் 69: **உத்தமசோழத் தேவர் : (பொங்கலூர்கா நாட்டு கண்டர வீமநல்லூர் அணுத்திரப் பல்லவரையன் உத்தம சோழர்-நூலில் கல்வெட்டு எண் 369, இக்கட்டுரையில் வரிசை எண் 4)**

கோயமுத்தூர் மாவட்டம், அவி நாசி வட்டம் திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் தெற்கு மேற்கு வடக்கு ஜகதியில் உள்ள கல்வெட்டு கோனேரின்மை கொண்டான் காலத்தியது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் செம்பியன் மந்திரி உத்தம சோழ தேவன் கட்டுரையில் வரிசை எண் 4-இல் (நூல் கல்வெட்டு எண் 369) குறிப்பிடப்படும் பொங்கலூர்கா நாட்டு ஆளுகை தோழன் கண்டர வீமநல்லூர் **அணுத்திரப் பல்லவரையன் உத்தம சோழன்** ஆகும். இவர் செம்பியன் மந்திரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். திருமுருகன்பூண்டியும் பொங்கலூர்கா நாட்டுக்கு அருகில் உள்ளது. இவர் தென்குடும்பராகையால் தேவேந்திர வம்சத்தைச் சேர்ந்த மள்ளர் ஆகும். திருமுருகநாதர் கோயில் தேவகன்மிகளிடம் நான்கு எல்லைகளுக்குட்பட்ட நிலத்தை நிவந்தங்களுக்காக தானமாக வழங்கி உத்தம சோழர் ஆணை பிறப்பித்துள்ளார்.

**140.** நூலில் கல்வெட்டு எண் 62: **உடையார் அதிகமானார்** (அரசிறை வரிக்கணக்கு அதிகாரிகளில் நக்கன் பாவையான **அதிகைமானார்**) : கோயமுத்தூர் மாவட்டம், அவி நாசி வட்டம் சேவூர் அழகப்பெருமாள் கோயில் கருவறை வடக்கு மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டு கோச்சடபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டியன் மள்ளர் ஆட்சியாண்டு 24, கி.பி.1276 காலத்தியது. இக்கல்வெட்டிலும் அடுத்து வரும் இரு கல்வெட்டுகளிலும் இந்த **அதிகைமானார்** குறிப்பிடப்படுகிறார். அரசு அதிகாரி, அதிகைமான்கள் மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தவர் என்பது கல்வெட்டுகளிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் சான்றுகள் காட்டி நிறுவப்பட்டுள்ளது. (இடைக்காலத் தமிழ் மள்ளர் குலத்தினரான தகடூர் அதியமான்கள், மள்ளர் மலர், திங்களிதழ், செப்டம்பர் 2000, பக் 4-7). கொங்கு நாட்டில் மள்ளர், குடும்பர் குல அதியமான்கள் பற்றிய கல்வெட்டுகள் பல உள்ளன. இந்த கல்வெட்டில் குறிக்கப்பெறும் அதிகாரி **அதிகைமானார்** சேவூரில் காளிங்க நர்த்தனப் பிள்ளையாரை எழுந்தருளப் பண்ணினார். சேவூருக்கு செம்பியன் கிழானடி நல்லூர் என்ற பெயரும் உள்ளது. வடபாரிசநாட்டு வியாபாரிகள் தாங்கள் எழுந்தருளச் செய்த மணவாள ஆழ்வாருக்கும் நாச்சிமார் இருவருக்கும் **உடையார் அதிகைமானார்** எழுந்தருளப் பண்ணின காளிங்க நர்த்தன பிள்ளையார்க்கும் அமுதுபடிக்கு பொருட்கள் வழங்க இசைந்து கல்வெட்டி வைத்தனர்.

**141.** நூலில் கல்வெட்டு எண் 63: **நரையனூர் நாட்டு பராந்தகன் (ராசிபுரம்?) அரசிறை வரிக்கணக்கு அதிகாரி நக்கன் பாவையான**

அதிகைமானார் : கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம் சேவூர் அழகப்பெருமாள் கோயில் கருவறை தெற்கு ஜகதியிலுள்ள கல்வெட்டு கோமாறவர்மரான ஸ்ரீசுந்தர பாண்டிய மள்ளர், ஆட்சியாண்டு 24 கி.பி.1276 காலத்தியது. நரையனூர் நாட்டுப் பராந்தகன் ராசிபுரம் அரசிறை வரிக்கணக்கு அதிகாரிகளில் நக்கன்பாவையான் அதிகைமானார் மள்ளரிடம் சேவூர் அழகப்பெருமாள் உபையத்துக்கு சேவூர் ஊரும் ஊராளிகளும் பெற்றுக் கொண்ட பணம் பத்துக்கு வெள்ளிக்கிழமை ஒன்றுக்கு சில கடமையைச் செய்வதாக இசைந்து கல்வெட்டிக் கொடுத்தனர். இதற்கு முந்திய மற்றும் பிந்திய கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் அதிகைமானாரும் இவரே.

**142.** நூலில் கல்வெட்டு எண் 64: உடையார் அதிகைமானார் (கல்வெட்டு 62 63-இல் குறிப்பிடப்படும் அதிகைமானாரும் இவரே) : கோயமுத்தூர் மாவட்டம் அவிநாசி வட்டம் சேவூர் அழகப் பெருமாள் கோயில் கருவறை-தென்புறம் உள்ள கல்வெட்டு சுந்தரபாண்டியன் மள்ளர், ஆட்சியாண்டு 24, கி.பி.1276 காலத்தியது. குடும்பர் குலத்தினரான நரையனூர் நாட்டு அரசு வரி வசூலிக்கும் நக்கன் பாவையான அதியமானார் மள்ளர் ஆட்சியாளராக, சேவூர் திருமேற்கோயிலுக்கு படை, உத்தரம், எழுத்தகம் ஆகியவற்றை விடைப்பேரில் மலையாளரும், சூரிவாரும், கன்னடியரும், தெலுங்களும் சவளக்காரருமாகி அந்நிய மொழியினர் தன்மமாகக் கொடுத்ததை ஏற்றுக் கொண்டு கல்வெட்டிக் கொடுத்துள்ளார்.

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்:

பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தரின்

1. தமிழ் இலக்கியத்தில் பள்ளர் (மள்ளர்) தேவேந்திர குல வேளாளர் (அடிப்படைச் சான்றுகள்) 1993, தேவேந்திர மன்றம், 5/1 குருசாமி நகர், பாரதியார் பல்கலைக் கழகம் (அஞ்சல்) கோயமுத்தூர் - 641 046.
2. மள்ளர் மலர் தொகுதிகள் 5 முதல் 9 (1999 -- 2003)

தேவஆசிர்வாதம் அவர்களின்

3. மூவேந்தர் யார், வேளாளர் யார், பள்ளர் அல்லர் மள்ளர் ஆம் மன்னர்.இராமதேவன் பதிப்பகம், மூவேந்தர் இல்லம், 180/12 யாகப்பா நகர், தஞ்சாவூர் - 613 007.

இம்மரபினர் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து தெரிந்து கொள்ள மள்ளர் மலர், திங்கள் இதழ் படியுங்கள்.
ஆசிரியர்: பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்.
செல்பேசி: 94431 44287, தொலைபேசி: 0422-2422287
மள்ளர் மலர் : ஆண்டுக்கட்டணம் ரூ120
வாழ்நாள் கட்டணம் ரூ1,500